# தமிழ் நாடு

திங்களிதழ்

இதழ் - 40 | தமிழ்நாட்டு மக்களின் உரிமைக் குரல் | நன்கொடை உரு.20


**திருவள்ளுவர் காலம் தொட்டே தமிழ் இனநலக் காப்புச் சிந்தனைகள் தொடங்கிவிட்டன..**

**சித்தர்கள் காலம் தொடங்கி ஆரியப் பார்ப்பனிய அதிகார வெறி எதிர்ப்பு வலுப்படத் தொடங்கி இருக்கிறது..**

**வள்ளலார் தொடங்கி இயக்கமாய்ச் செயல்படுவதற்கான முயற்சிகள் நடந்திருக்கின்றன..**

**பெரியார், மறைமலைஅடிகள், சோமசுந்திர பாரதியார் இணைந்து முழங்கிய தமிழ்நாடு தமிழருக்கே! - என்ற முழக்கம் காலத்தால் படிப்படியே வலுப்படவும் அரசியலால் கூர்மைப்படவும் செய்திருக்கிறது..**

**எண்ணற்ற தலைவர்கள் அறிஞர்கள் தமிழ்நாட்டு உரிமை மீட்பு அரசியலைக் கூர்மைப்படுத்தியிருக்கின்றனர்..**

**பாவலரேறு பெருஞ்சித்திரனார், தோழர் தமிழரசன், புலவர் கலியபெருமாள், ஐயா ஆனைமுத்து உள்ளிட்டோர் தமிழ்த்தேசிய உரிமை அரசியலை வலுப்படுத்தி வளர்த்தெடுத்து வந்திருக்கின்றனர்..**

## தமிழ்இந்து, பிராமணக் கடப்பாரை - போன்றவற்றைத் துணைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிற கருத்தாடல்கள் தமிழ்த்தேச உரிமை மீட்பு அரசியலைச் சிதைத்துச் சீரழிப்பவை..

தமிழ்நாட்டு இளைஞர்கள் எச்சரிக்கையாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டிய காலம் இது...

தேர்தல் அரசியல்வழிச் செயற்பாடுகளைக் கடந்து, தமிழ் மொழி, இன, நாட்டு உரிமை மீட்பு முயற்சிகளை வலுப்படுத்திச் செய்ய வேண்டியது காலத்தின் தேவைக்குரியது..

இந்திய ஆரியப் பார்ப்பனியத்தின் ஆர். எஸ். எஸ்., இந்து முன்னணி, பாஜக உள்ளிட்ட சங்பரிவாரின் ஆக்டோபஸ் செயற்பாடுகளையும், பன்னாட்டு முதலாளிய அதிகாரப் போக்குகளையும் எதிர்த்துத் தமிழ்த்தேச உரிமைக் கருத்துகளை மொழி, பண்பாடு, வரலாறு, வாழ்வியல், அரசியல், பொருளியல் என எல்லா முனைகளில் இருந்தும் வலுப்படுத்திச் செயல்படுத்துவதற்கு உரிய திட்டங்கள் தேவை..

தனித்தனியாகப் பிளவுபட்டுத் தங்களின் கட்சி, இயக்கம் என்கிற அடைப்புகளை நீக்கி முன்னணியாய் ஒன்றிணைவதற்கான தேவையும் காலமும் தமிழ்நாட்டிற்குத் தேவைப்படுகிறது..

தமிழ்த் தேசிய உணர்வாளர்கள், மார்க்சிய, பெரியாரிய, அம்பேத்காரிய நெறிகளை ஏற்ற தோழர்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதைத் தவிர வேறு வழி இல்லை..

காலத்தின், தமிழ்நாட்டின் தேவையை அனைவரும் உணர்ந்தாக வேண்டும்..

# 2026 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள 17 ஆவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தேர்தலையொட்டி அதில் பங்கேற்கும் தமிழ்நாட்டின் நலம் நோக்கிய கட்சிகள் நிறைவேற்றப்பெற வேண்டிய சில முதன்மைக் கோரிக்கைகள்.

## தமிழக மக்கள் முன்னணி பரிந்துரைக்கிறது.

### கல்வி

1. தமிழ் வழியில் படித்தோருக்கு உயர்கல்வியில், வேலைவாய்ப்பில் முன்னுரிமை தர வேண்டும். முதற்கட்டமாக 50 விழுக்காடாவது தருதல் வேண்டும்.

2. கல்விக்கான இறையாண்மை அதிகாரம் முழுக்க முழுக்க மாநிலங்களுக்கே இருக்கிறபடி தமிழ்நாடு அரசு கடுமையாகப் போராடிப் பெற வேண்டும்.

3. அனைத்து ஆங்கில வழி மழலையர் பள்ளிகளையும் தமிழக அரசு தடை செய்ய வேண்டும். அவற்றுக்கு மாற்றாக ஆங்கில வழி மழலையர் பள்ளிகளைத் தமிழ்வழி மழலையர் பள்ளிகளாக அரசே திறக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் மழலையர் பள்ளிகள் தனியாரிடம் இருக்கக் கூடாது.

4. தாய்த்தமிழ்ப் பள்ளிகளை அரசு உதவி பெறும் பள்ளிகளாக மாற்றிட வேண்டும்.

5. அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழியில் பாடங்கள் நடத்துவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

6. மருத்துவப் பட்டப்படிப்பில் ஒன்றிய அரசின் அகில இந்திய ஒதுக்கீடு 15%, மற்றும் மருத்துவ உயர் கல்வியில் 50% ஒதுக்கீடு ஆகியவற்றைத் தமிழ்நாடு நீக்க வேண்டும். இந்தியாவிலேயே மிகச்சிறந்த மருத்துவக் கல்விக் கட்டமைப்பு இங்கு இருப்பதால், இந்திய அளவிலான ஒதுக்கீட்டை நம் மாணவர்கள் நம்பி இருக்கத் தேவையில்லை.

7. தமிழ்நாட்டு அரசின் சார்பில் முறையாகத் தமிழ்நாட்டு வரலாற்று நூலை உருவாக்கி மலிவு விலையில் மாணவர்களுக்குக் கொடுத்திடல் வேண்டும்.. அந்த வரலாற்று நூலே அரசால் ஏற்கப்பட்ட வரலாற்று நூலாக இருத்தல் வேண்டும்.

8. அதேபோல் தமிழ்நாட்டு அரசின் சார்பில் ஆங்கிலம் - தமிழ் அகராதி மலிவு விலையில் தமிழ்நாடு அரசே பொறுப்பெடுத்து உருவாக்கி வெளியிட வேண்டும்.

### தமிழர் எனும் பதிவு

9. தமிழ்நாட்டின் தமிழர்கள் அனைவரும் தங்களின் தேசிய இனத்தைத் தமிழர்கள் என்றே பதிந்திட வேண்டும்..

10. இந்தியக் குடிமகன் என்று பதிந்து கொள்வது சட்டத்தின் படி இருக்கிற அதே சூழலில், தமிழன் என்கிற தேசிய இன அடையாளத்தைப் பதிவிடுவதற்கு எந்தத் தடையும் இருக்கக் கூடாது

### தமிழ்நாட்டு எல்லை

11. தமிழ்நாட்டிற்கும் கேரளத்திற்குமான எல்லை, குறிப்பாக ஆனைகட்டிப் பகுதியில், வரையறுக்கப்படாமலிருக்கிறது. தமிழக அரசு அதை முறைப்படுத்தித் தமிழகத்தின் எல்லைகளைப் பாதுகாக்க வேண்டும்.

### சுங்கச் சாவடிகள்

12. இந்தியாவிலேயே மிக அதிகமான அளவு 78 சுங்கச்சாவடிகள் தமிழ்நாட்டில்தான் உள்ளன. இவற்றை முற்றிலுமாக நீக்குவதற்கு முன்பு உடனடியாகப் பாதியாகவாவது குறைக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் புதிய சுங்கச் சாவடிகள் திறக்கப்படாமலிருப்பதைத் தமிழக அரசு கண்காணிக்க வேண்டும்.

13. ஒவ்வொரு சுங்கச்சாவடியின் காலத்தையும் வரையறை செய்ய வேண்டும். காலத்தை மீறிச் சுங்கங்கள் பெறுதலைத் தடை செய்ய வேண்டும்.

### சாதி ஆணவப் படுகொலை

14. நீதிமன்றங்கள் வலியுறுத்தியபடி ஆணவப் படுகொலைகள் நடைபெறும் பகுதிகளிலுள்ள மாவட்ட ஆட்சியர், காவல்துறை உயர் அதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். மேலும் கடமை தவறும் அதிகாரிகளை உடனடியாக இடைநீக்கம் செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

15. பெரும்பான்மைச் சமூகங்கள் தொகுப்பாக இருக்கும் பகுதியில், அதே சாதியைச் சார்ந்தவர்கள் உயர்பொறுப்பில் அமர்த்தப்படக் கூடாது. அதேபோல் தேர்தல்களில் பெரும்பான்மை எண்ணிக்கைச் சாதியினரையே அந்தப் பகுதியின் வேட்பாளராக நிறுத்தவும் கூடாது.

16. சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர்களை எந்தக் குறிப்பிட்ட சாதியோடும் பதியாமல், சாதி சமயமற்றவர் என்றே பதிவு செய்தல் வேண்டும். அவர்களின் குழந்தைகளையும் சாதி சமயமற்றவராகவே பதிந்திடல் வேண்டும்..

17. சாதிமறுப்பு இணையருக்கு அரசுப் பணிகளில் சிறப்பு ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இணையருக்கு இலவயமாக வீடு வழங்கப்பட வேண்டும். அவர்களின் குழந்தைகள் உயர்கல்வி வரை கற்பதற்கான முழுச் செலவினையும் அரசே ஏற்க வேண்டும்.

### பெயர்ப்பலகை

18, தமிழில் பெயர்ப்பலகை வைக்காத வணிக நிறுவனங்கள் அனைத்திற்கும் ஒன்று போலவே ரூ.2000 மட்டும் தண்டம் விதிக்கப்படுகிறது. இதை மாற்றி கடையின் அளவிற்கு ஏற்ப தண்டத் தொகையை அறிவிக்க வேண்டும். அப்பொழுதுதான் இதில் முன்னேற்றம் ஏற்படும். மேலும் பெயர்ப்பலகையைக் கண்காணிக்கும் பொறுப்பு, தொழிலாளர் நலத்துறையிலிருந்து முழுமையாகத் தமிழ் வளர்ச்சித் துறைக்கு மாற்றப்பட வேண்டும். அதற்கேற்ப தமிழ் வளர்ச்சித் துறையில் உரிய அளவு அலுவலர்கள் அமர்த்தப்பட வேண்டும்.

### ஆட்சிமொழி

19, தமிழக அரசின் அனைத்து நிர்வாக அலுவலகங்களிலும் 100% தமிழே ஆட்சிமொழியாக இருக்க வேண்டும். இது முதலில்

தலைமைச் செயலகத்திலிருந்துதான் தொடங்கப்பட வேண்டும். பிற மொழி சார்ந்த உயர் அதிகாரிகளுக்கான தமிழ்மொழிப் பயிற்சி தமிழக அரசால் குறிப்பிட்ட காலஅளவிற்கு உறுதியாக வழங்கப்பட வேண்டும்.

### வழிபாட்டு மொழி

20, அனைத்து ஆலயங்களிலும் குடமுழுக்கு 100% தமிழில் மட்டுமே நடத்தப்பட வேண்டும்.

21. அனைத்து சாதியினரும் பூசகர்(அர்ச்சகர்) ஆகலாம் என அரசாணை மட்டுமே தமிழகத்தில் உள்ளது அதைச் சட்டமாக்க வேண்டும்.

### வள்ளுவர் சிலை

22. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அந்தந்த ஆட்சியர் அலுவலகத்தில் திருவள்ளுவர் சிலையை அரசு நிறுவ வேண்டும்.

23. திருக்குறளைத் தமிழ்நாட்டின் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும்.

### இடம்பெயர் தொழிலாளர்கள்

24. வேறு மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு வரும் தொழிலாளர்கள் பற்றிய அனைத்து விளக்கங்களும் அரசால் பதிவு செய்யப்பட்டு, அது பொது வெளியில் பகிரப்பட வேண்டும். மேலும், வடகிழக்கு மாநிலங்களில் உள்ளது போல், இடம் பெயர் தொழிலாளர்களுக்குச் சிறப்பு அனுமதிச் சீட்டு வழங்கப்பட வேண்டும்

### வேலை வாய்ப்பு

25. தமிழகத்திலுள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிலும் 100% வேலைவாய்ப்பு தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கே வழங்கும்படி சட்டம் இயற்ற வேண்டும். அதே போல் தமிழ்நாட்டில் இயங்கும் இந்திய ஒன்றிய அரசுப் பணிகளில் 80% தமிழகத்தில் உள்ளவர்களுக்கே வழங்கப்பட வேண்டும்.

### சிறைத்துறை

26. சிறைக்குள் 20 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறைப்படுத்தப்பட்டிருக்கிற வாழ்நாள் சிறையாளர்கள் அனைவரையும் தமிழ்நாடு அரசு விடுதலை செய்ய வேண்டும்.

27. தமிழகத்திலுள்ள ஈழத் தமிழர் சிறப்பு முகாம் காலத்தாழ்த்தமின்றி உடனடியாக இழுத்து மூடப்பட வேண்டும்.

28. விடுதலைப்புலிகள் அமைப்பின் மீதான தடை முழுமையாக நீக்கப்பட வேண்டும். இதற்காகத் தமிழகச் சட்டமன்றத்தில் சிறப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும்.

### மனித உரிமை

29. காவல்துறை சித்திரவதைக்கு எதிரான சிறப்புச் சட்டம், தமிழகத்தில் இயற்றப்பட வேண்டும்.

30. ஸ்டெர்லைட் ஆலை துப்பாக்கிச் சூட்டிற்குக் காரணமான அதிகாரிகளை நீதிபதி அருணா செகதீசன் அறிக்கை மிகத்தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளது. அவர்கள் அனைவர் மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### வானூர்தி நிலையம்

31. தமிழ்நாட்டிற்குள் பயணம் மேற்கொள்ளும் அனைத்து வானூர்திகளிலும் அறிவிப்புகள் உறுதியாகத் தமிழில் வழங்கப்பட வேண்டும். தமிழகத்திலுள்ள அனைத்து வானூர்தி நிலையங்களிலும் பணியமர்த்தப்படுவோர்க்கு தமிழும், ஆங்கிலமும் தெரிந்திருக்க வேண்டும்.

### தொலைக்காட்சி

32. பொதிகை என்றும் தூர்தர்சன் என்றும் இந்திய அரசின் தொலைக்காட்சிகள் இயங்குவது போன்று தமிழ்நாட்டு அரசுக்கு என்று ஒரு தொலைக்காட்சி இயக்கப்பட வேண்டும். எத்தனையோ தனியார் தொலைக்காட்சிகள் இருக்கும் சூழலில் தமிழ்நாட்டு அரசுக்கென்று ஒரு தொலைக்காட்சி செய்திகளை, பண்பாட்டு நிகழ்ச்சிகளை, வரலாற்று நிகழ்ச்சிகளை, அறிவியல் நிகழ்ச்சிகளைக் காட்சிப்படுத்துகிற வகையில் இயக்கப்பட வேண்டும்.

### மூட நம்பிக்கை ஒழிப்பு

33. பேய், பிசாசு, பில்லி, சூனியம் போன்ற பல்வேறு மூட நம்பிக்கைகளை நீக்க, மராட்டிய மாநிலத்தில் உள்ளது போல, மூட நம்பிக்கை ஒழிப்புச் சட்டம் தமிழகத்திலும் கொண்டு வரப்பட வேண்டும்.

### ஆளுநர்

34. ஆளுநர் அமைப்பு முறையே இந்திய அரசியலுக்குத் தேவை இல்லை என்கிற கருத்தைத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானமாக இயற்றி இந்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். அதே கருத்தைப் பிற மாநிலங்களில் உள்ள சட்டப்பேரவைகளில் தீர்மானம் இயற்றிடக் கருத்துப் பரப்பல் மேற்கொள்ள வேண்டும்.

35. ஆளுநருக்கான அனைத்துச் செலவுகளையும் தமிழ்நாடு அரசே ஏற்கிறது. எனவே ஆளுநருக்கான செலவு விளக்கத்தை ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசு, பொதுவெளியில் வெளியிட வேண்டும்.

### தமிழ்நாட்டிற்கென்று தனிக்கொடி

36. கருநாடகா, மிசோரம், நாகலாந்து, காசுமீரம் உள்ளிட்டுப் பல மாநிலங்களில் உள்ளதுபோல் தமிழ்நாட்டுக்கென்று தனிக் கொடி ஒன்றைத் தமிழ்நாட்டரசு தமிழறிஞர்களையெல்லாம் அழைத்துக் கலந்துபேசி அறிவிக்கவேண்டும். தமிழ்நாடு நாள் விழாவன்று அந்தக் கொடி தமிழ்நாடெங்கும் மதிப்போடு ஏற்றப்பட வேண்டும்.

### தொழிலாளர் போராட்டங்கள்

37. பன்னாட்டுத் தொழிலகங்களில் நடைபெறும் தொழிலாளர்களின் போராட்டங்களின் காரணங்களை அரசு கருத்தில் கொண்டு தொழில் நிறுவனங்களிடம் பேசி அவற்றைத் தீர்த்து வைக்க வேண்டும். தொழிலாளர்களைச் சட்டம் ஒழுங்கைக் காரணங்காட்டி ஒடுக்குவதை முற்றிலுமாக அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

38. தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட அடிநிலைப் பணியாளர்களின் கோரிக்கைகளை அரசு முடிந்தவரை நிறைவேற்றிடல் வேண்டும். சட்டம் ஒழுங்கு என்கிற பெயரில் போராட்டங்களை அடக்குவதை மேற்கொள்ளக்கூடாது.

# சோழ மன்னர்கள் காலத்தில் சமூகம் சமஸ்கிருத மயமாகவில்லையா? பிராமணர்களின் மேலாதிக்கம் நிறுவப்படவில்லையா?

பேராசிரியர் த. செயராமன்
தமிழ்மண் தன்னுரிமை இயக்கம்

**அண்மைக் காலத்தில் சில ஆய்வாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் தங்கள் விருப்பப்படி வரலாற்றைத் திரித்து எழுதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வர்ணாசிரமமும், சாதிப் படிநிலை அடுக்கும் கி.பி. 14 – ஆம் நூற்றாண்டில் விசயநகரப் பேரரசு தமிழ்நாட்டின் மீது நிறுவப்பட்ட பிறகுதான் ஏற்பட்டது என்றும், சோழர்கள் காலத்தில் அனைத்து மக்களும் சமநிலையில் வாழ்ந்தார்கள் என்றும், சோழர்கள் காலத்தில் தமிழ்நாட்டில் வர்ணாசிரமம் நிறுவப்படவில்லை என்றும், சோழர்கள் தமிழையே உயர்த்திப் பிடித்தார்கள் என்றும் எழுதுவதைக் காண முடிகிறது. அவர்கள் சான்றுகளின் அடிப்படையில்தான் இந்த கருத்துகளை முன் வைக்கிறார்களா என்ற கேள்வி எழுகிறது. தமிழ் மன்னர்களை உயர்த்திப் பிடிப்பதன் மூலம், தமிழர்களின் பெருமையை நிலை நிறுத்துவதாகக் கருதிக் கொள்கிறார்கள். சோழர்கள் காலத்திய சமூகக் கட்டமைப்பின் சாதிப் படிநிலைகளை, வர்ணாசிரமத்தின் அடிப்படையிலான வாழ்வியல் நெறிமுறைகளை மறுத்து, மறைத்து, சோழர்கள் காலத்தைப் புனிதப்படுத்துவதன் நோக்கம்தான் என்ன? வரலாற்றை வரலாறாகத்தான் பார்க்க வேண்டும். அதைத் தங்கள் விருப்பத்திற்கு, தங்கள் சாதிய அரசியலுக்கு ஏற்ப வடிவமைத்துக்கொள்ள முயற்சிக்கக் கூடாது.**

சங்கக் காலத்திற்குப் பிறகு பல்லவர்கள் காலத்தில் தொடங்கிய பெருங்கோயில் பண்பாடு மற்றும் பெருநில உடைமைப் பொருளியல், அதற்கே உரித்தான சுரண்டலுக்கான சமூகக் கட்டமைப்பை நிறுவிக் கொண்டது. இச்சுரண்டலை நிரந்தரப்படுத்தும் வகையில், கடவுளின் பெயராலும், சாஸ்திரங்களின் பெயராலும், சடங்குகளின் பெயராலும், பக்தியின் பெயராலும், விதியின் பெயராலும், உழைப்புச் சுரண்டலை மக்களை ஏற்கச் செய்கிற வேலையைப் பார்ப்பனர்களே செய்தார்கள்; அதற்கான வெகுமதியையும் அவர்கள் நிலவுடைமை வகுப்பிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். பார்ப்பனர்களின் நலனை நிலவுடைமை வகுப்பும், நிலவுடைமை வகுப்பாரின் சுரண்டலை நிரந்தரப்படுத்தித் தரும் வேலையைப் பார்ப்பன வகுப்பும் பார்த்துக் கொண்டன. இடைக்கால வரலாற்றில், கோயில்கள் சமூக- பொருளியல் - பண்பாட்டு மையங்களாக உருப்பெற்றன. உடைமைப் பிரிவினருக்கும், உழைக்கும் பிரிவினருக்கும் கோயிலோடு தொடர்பு இருந்தது. நிலவுடைமையுமற்ற, வழிபாட்டுரிமையுமற்ற, உற்பத்தியோடு மட்டும் தொடர்புடைய உழைக்கும் மக்கள் முழுமையான சுரண்டலுக்கு, "விதி" என்ற பெயரிலும், "கடமை " என்ற பெயரிலும் உட்படுத்தப்பட்டனர். சோழர்கள் காலத்திய வரலாற்றுச் சான்றுகள் இதைத்தான் வெளிப்படுத்துகின்றன.

### சோழ மன்னர்களைப் போற்றுவது தங்கள் அரசியல் கடமையா?

சோழ மன்னர்களையும், சோழர் காலத்துச் சமூகத்தையும் போற்றுவதும் புகழ்வதும் தமிழர்களின் கடமை என்று கருதுவது அறியாமை. அப்படிச் சிலர் கற்பித்து வருகிறார்கள். சோழர் காலமாக இருந்தால் என்ன? விசயநகரப் பேரரசு காலமாக இருந்தால் என்ன? ஆண்டவன் பெயராலும், அரசதிகாரத்தின் பெயராலும் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒடுக்குமுறை நிறைந்த சமூகக் கட்டமைப்பை அப்பட்டமாக ஆய்வு செய்வதும், பேசுவதும் வரலாற்றாளர்களின் கடமை. சோழர் காலத்துச் சமூகக் கட்டமைப்பு எப்படிச் சாமானிய மக்களை வருத்தியதோ, அதுபோன்றே விசயநகரப் பேரரசுக் காலத்தில் கெட்டிப்பட்டுப்போன படிநிலை சாதியச் சமூகம் அனைத்துச் சமூகப் பிரிவுகளுக்கும் உழைப்புச் சுரண்டலையும், துயரத்தையும் கூடுதலாக உத்தரவாதப்படுத்தியது. இதில் ஒரு காலகட்டத்தைப் போற்றுவது, இன்னொரு காலகட்டத்தைத் தூற்றுவது என்ற போக்குக்கே இடமில்லை. ஒவ்வொரு வரலாற்றுக் கட்டமும் எப்படி இருந்ததோ அதை அப்படியே, துல்லியமாக, மறைக்காமல், சார்புத் தன்மையற்று, சான்றுகளின் அடிப்படையில் பேசுவதுதான் நேர்மை. இப்போது சோழர்கள் காலத்துச் சமூகநிலையையும் அரசுமுறையையும் பற்றி நம் கவனத்தைத் திருப்ப வேண்டிய தேவை எழுந்துள்ளது.

### தொல். திருமாவளவன் பேசியதில் என்ன தவறு?

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு. தொல். திருமாவளவன், சென்னை கொளத்தூரில், தழல் ஈகி முத்துக்குமார் நினைவேந்தல் (29.1.2026) நிகழ்வில் பேசும்போது:

*"சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் எப்பேர்ப்பட்ட மன்னாதி மன்னர்களாக இருந்தாலும், தமிழ் அழிவதற்கும், கலாச்சாரம் அழிவதற்கும் வழிவகுத்தவர்கள். அவர்களின் காலத்தில்தான் இந்த நாடு குட்டிச்சுவர் ஆனது."*

*"எனக்கு எந்த அரசன் மீதும் மதிப்பு கிடையாது. எவனையும் பெரிய சக்தியாகப் பார்க்கவில்லை. அந்த மன்னர்கள் காலத்தில்தான் இந்த நாடு குட்டிச்சுவர் ஆனது. சமஸ்கிருத மயமானது, இந்துத்துவமயமானது.*

*கோயிலின் கருவறைக்குள்ளே இருந்த தமிழ் தூக்கி வெளியே வீசப்பட்டதெல்லாம் இந்தப் பாண்டிய மன்னர்கள், சோழ மன்னர்கள், சேர மன்னர்கள், பல்லவ மன்னர்கள் ஆண்ட காலத்தில்தான். வேள்வி நடத்தியவன் யாகம் நடத்தியவன் எல்லாம், தமிழ்ப் பெயர்களை மாற்றி வடமொழிப் பெயர்களைத் தங்கள் பெயருக்குப் பின்னால் சூட்டிக்கொண்டார்கள். இராஜராஜன் என்பது தமிழ்ப் பெயரா? அராஜேந்திரன் என்பது தமிழ்ப் பெயரா? எல்லாரும் வடமொழிப் பெயர்களைச் சூட்டிக் கொண்டவர்கள். வடமொழியிலேயே மயங்கிக் கிடந்தவர்கள். பார்ப்பனர்களின் வேள்வி, யாகங்களில் மயங்கிக் கிடந்தவர்கள். அவர்கள் எப்பேர்ப்பட்ட மன்னாதி மன்னர்களாக இருந்தாலும், என் தமிழ் அழிவதற்கும், கலாச்சாரம் அழிவதற்கும் வழிவகுத்தவர்கள் அவர்கள் என்பதை உணர்ந்தவன் நான். எனவே எனக்கு ஆண்ட பரம்பரை என்று சொல்வதில் எந்தப் பெருமையும் இல்லை. அதில் உடன்பாடும் இல்லை. வெறும் மொழிப்பற்று எனக்குக் கிடையாது. வெறும் இனப்பற்று, இன உணர்வு எனக்குத் தேவையில்லை என்று கருதக்கூடியவன் நான். அதுதான் பெரியாரின் பார்வை. சாதியை ஒழிக்காமல் இங்கே சமத்துவத்தை நிலைநாட்ட முடியாது என உறுதியாக நின்றவர் தந்தை பெரியார்" என்று பேசினார்.*

தமிழ் மன்னர்கள் மீதும் அந்தக் காலகட்டத்தின் மீதும் தொல். திருமாவளவன் அவர்கள் வைத்த விமர்சனம் ஆய்வின் அடிப்படையில் சரியாக இருக்கிறதா என்பதைத்தான் பார்க்க வேண்டும்; அவருடைய கருத்துக்கு எதிர்வினை ஆற்றுகிறவர்கள் ஆய்வின் அடிப்படையில் எதிர்வினை ஆற்ற வேண்டும். ஆனால் இதற்கு எதிர்வினை ஆற்றுகிறவர்கள் இராஜராஜ சோழனையும், இராஜேந்திர சோழனையும் யாராவது குறை கூறிவிட்டால், அவர்கள்

தமிழினத்திற்கே எதிரிகள் என்ற கோணத்தில் விமர்சனங்களை அள்ளி வீசுவது ஏற்க முடியாத ஒன்று.

தொல். திருமாவளவன் அவர்களின் பேச்சுக்கு ஐயா பெ.மணியரசன் ஆற்றியிருக்கும் எதிர்வினை திகைக்க வைக்கிறது.
"*சிங்கள புத்தத்திற்குத் தமிழர்களை மாற்றிட தமிழ் மன்னர்களை எல்லாம் தாக்குகிறார் திருமாவளவன்!*" என்கிறார்.

பேரரசன் இராஜராஜன், இராஜேந்திரன் காலத்திய சமூகப் போக்கை ஒருவர் விமர்சனம் செய்தால் அவர் புத்த மதத்தைப் பரப்ப முயற்சிக்கிறார் என்றா பொருள்?

திருமாவளவன் என்ன மதப் பிரசங்கம்தான் செய்து கொண்டிருக்கிறாரா? புத்தத்திற்கு மதம் மாற்றுவதைத்தான் அவர் தன்வேலையாக ஏற்றுக் கொண்டிருக்கிறாரா? அவருடைய உரை மக்களை மதம் மாற்றுவதற்கான உரையா? கடந்த பல்லவர் கால, சோழர் கால, பாண்டியர் காலச் சமூக - அரசியல் நிலைகள் பற்றிய கடுமையான விமர்சனம் அவருடையது. ஐயா மணியரசன் சான்றுகளின் அடிப்படையில் அவருடைய விமர்சனத்தை எதிர்கொண்டிருக்க வேண்டும். ஆனால், எவ்வகைத் தொடர்பும் இல்லாமல், தொல் திருமாவளவன் மீது அபத்தமான ஒரு குற்றச்சாட்டை வைப்பது எல்லோரையுமே திகைக்க வைக்கிறது.

அது மட்டும் இன்றி, ஐயா மணியரசன்: "*தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் திருமாவளவன் இழிவுபடுத்தி விட்டார்*" - என்கிறார். தொல். திருமாவளவன் உரையில் தேடித்தேடிப் பார்த்தாலும் தமிழ் மொழியையும் தமிழ் இனத்தையும் இழிவு படுத்தக்கூடிய ஒற்றைச் சொல் கூட இல்லையே! ஆனாலும் அப்படி ஒரு குற்றச்சாட்டை ஐயா மணியரசன் வைக்கிறார்.

அதுமட்டுமின்றி, தொல். திருமாவளவன் அவர்களை எதிர்த்துச் சாதிகளை எல்லாம் அணிசேர்க்கை செய்கிறார். "*தமிழ் மொழியை - தமிழ் இனத்தை இழிவுபடுத்தினால் தமிழர்கள் - கட்சி வேறுபாடின்றி - சாதிவேறுபாடின்றி எதிர்ப்போம்!*" என்கிறார்.

ஐயா மணியரசன் மேலும் கூறுகிறார்:
"தமிழ் மன்னர்களைத் தாக்குவதற்காக, சூழ்ச்சியாகத் தமிழ் மன்னர்கள் சமற்கிருதத்தை அனுமதித்தார்கள், - சமற்கிருதத்தில் பெயர் வைத்துக் கொண்டார்கள் - என்று தந்திரமாகப் பேசுகிறார் திருமா. தமிழர்களே விழிப்போடிருங்கள்! " என்கிறார்.

தமிழ் மன்னர்கள் சமஸ்கிருதத்தை அனுமதிக்கவில்லையா? சமஸ்கிருதத்தில் பெயர் வைத்துக்கொள்ளவில்லையா? தங்கள் நிர்வாகத்தில் சமஸ்கிருதத்தைப் பயன்படுத்தவில்லையா? சோழ, பாண்டிய மன்னர்கள் வருணாசிரமத்தை ஏற்றுக் கொள்ளவில்லையா? என்பது போன்ற கேள்விகளுக்கு நாம் சான்றுகளின் அடிப்படையில் பேச வேண்டும்.

பாஜக தலைவர் அண்ணாமலை, தமிழிசை சௌந்தரராஜன் போன்றவர்களும் தொல்.திருமாவளவனைக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். திரு. அண்ணாமலை மாபெரும் மன்னர்களைத் தொல்.திருமாவளவன் அவதூறாகப் பேசுவதாகக் கூறுகிறார். அதாவது, அவர்களெல்லாம் மாபெரும் மன்னர்கள், பெரிய மனிதர்களைக் கண்டித்துப் பேசக்கூடாது என்பது அவர் பார்வை.

தொல். திருமாவளவனைக் கண்டித்துப் பேசியவர்களுக்குள் ஓர் ஒற்றுமை இருக்கிறது. அவர்கள் அனைவருமே சாதிய உணர்வாளர்களாகவும், பார்ப்பன ஆதரவாளர்களாகவும், இந்துத்துவ சிந்தனை கொணடவர்களாகவும் இருக்கிறார்கள்.

திரு. தொல். திருமாவளவன் "தமிழ் மன்னர்களைத் திட்டமிட்டே தாக்குகிறார் " என்று ஐயா மணியரசன் கூறுகிறார்., "தமிழ் மன்னர்கள் சமஸ்கிருதத்தை அனுமதித்தார்கள், சமஸ்கிருதத்தில் பெயர் வைத்துக் கொண்டார்கள் - என்று கூறுவது, சூழ்ச்சியாக, தந்திரமாகப் பேசுவது" என்று ஐயா மணியரசன் கூறுகிறார். திருமாவளவன் கூறியது சான்றுகளின் அடிப்படையில் தவறு என்றுதான் நிரூபிக்க வேண்டுமேயொழிய, அவர் சூழ்ச்சி செய்கிறார் என்றெல்லாம் பேசக்கூடாது.

## சோழ மன்னர்கள் சமஸ்கிருத பெயர்களைச் சூடவில்லையா?

இராஜராஜன், இராஜேந்திரன் என்பவை தமிழ்ப் பெயர்களா? என்று திருமாவளவன் கேட்டதற்கு விடையாக சிலர், அருண்மொழி என்பது இராஜராஜனின் இயற்பெயர்; மதுராந்தகன் என்பது இராஜேந்திரனின் இயற்பெயர் என்று பதில் அளித்திருக்கிறார்கள். இராஜராஜ சோழன் அருள்மொழி தேவன் என்றும் அருண்மொழிவர்மன் என்றும் வரலாற்றில் அறியப்படுகிறான். இதில் தேவன் என்பது தமிழ் சொல்லா? வர்மன் என்பது தமிழ்ச் சொல்லா? வர்ணாசிரமத்தில் இரண்டாம் நிலையில் இருக்கும் சத்திரியர்களின் பட்டப் பெயர்தான் வர்மன் என்பது. இராஜேந்திரன் என்பது தமிழா என்ற கேள்விக்கு பதிலாக, அவருடைய இயற்பெயர் மதுராந்தகன் என்று கூறுகிறார்கள். மதுராந்தகன் என்பது தமிழா? மதுரம் என்ற சொல் தமிழா? மதுராந்தகன் என்ற சொல்லுக்கும் மதுரை நகருக்கும் தொடர்பு இல்லை. இராஜராஜன் சூடிக்கொண்ட அத்தனைப் பட்டப் பெயர்களும் சமஸ்கிருதப் பெயர்கள்தான்.

சமீப காலத்தில் பலர் ஆய்வு என்ற பெயரில் சோழர்கள் காலத்தில் சாதிமுறையே கிடையாது என்றும், சோழர்கள் காலத்தில் வருணாசிரமம் கிடையாது என்றும், சோழர்களால் சமஸ்கிருதம் ஆதரிக்கப்படவில்லை என்றும், தொடர்ந்து எழுதி வருவதன் உண்மைத்தன்மையை நாம் ஆய்வு செய்தாக வேண்டும்.

## பேரரசன் முதலாம்இராஜராஜன் (கி.பி.985-1014 ) காலத்தில் வர்ணாசிரமம் சோழப் பேரரசில் ஏற்கப்பட்டதா?

ஏற்கப்பட்டது என்பதே உண்மை. சோழ மன்னர்கள் மனுநெறி காப்பதில் மகிழ்ச்சி கொண்டார்கள். சமஸ்கிருதத்திற்கு கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் முதலிடம் தந்தார்கள். தமிழைக் கற்பிக்க கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப்படவில்லை. அவர்கள் உருவாக்கிய பெரிய கல்வி நிலையங்கள் எல்லாம் சமஸ்கிருதமே கற்பித்தன. மாணவர்களும் ஆசிரியர்களும் பார்ப்பனர்களாகவே இருந்தார்கள். பிரமிக்க வைக்கும் பெரும் ஊதியம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. முதலாம் இராஜராஜன் ஏற்ற பட்டங்களில் ஒன்று 'சத்திரிய சிகாமணி'. இது சமஸ்கிருத பட்டம்தான். இதன் பொருள் சத்திரிய குலத்தின் தலைசிறந்த இரத்தினம் என்பதுதான். சத்திரிய சிகாமணி என்ற சொல் சோழ மன்னர்கள் வர்ணாசிரமத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள் என்பதற்கான சான்று. 'சத்திரிய சிகாமணி வளநாடு' என்று ஒரு நிர்வாகப் பிரிவு அப்போது இருந்தது. இன்றைய நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டம் ஆகியவை சத்திரிய சிகாமணி வளநாட்டில் அடங்கும். தஞ்சை பெரிய கோயில் கருவறையின் வெளிப்புறச் சுவர்களில் பீடப்பகுதியில் செதுக்கப்பட்டுள்ள நீண்ட கல்வெட்டில் இதற்குச் சான்றுள்ளது. (தென்னிந்தியக் கல்வெட்டு தொகுதி : 2, பகுதி 1, எண் 69).

இராஜராஜ சோழனின் தளபதி பஞ்சவன் மாராயன் என்பவன் கொங்கு பகுதியில் பெற்ற வெற்றிக்காகச் "சத்திரிய சிகாமணி கொங்கழ்வான்" என்ற பட்டத்தை இராஜராஜ சோழன் வழங்கினான். தஞ்சை பெரிய கோயில் வடக்கு சுவரில் இதற்கான சான்று கல்வெட்டாக உள்ளது (தென்னிந்தியக் கல்வெட்டு தொகுதி 2, பகுதி 3, எண் 66 ) .

முதலாம் இராஜராஜனின் மற்றொரு பட்டப் பெயர் "சத்திரிய சூடாமணி". இது ஆனைமங்கலம் செப்பேட்டில் சமஸ்கிருதப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (Larger Leiden Plates of Rajaraja I, Epigraphia Indica, vol. 22 , No.34, pp. 213 -236. )

மேலும், ஆனைமங்கலம் "சத்திரிய சூடாமணி வளநாடு" என்ற நிர்வாகப் பகுதிக்குள் இருந்ததை ஆனைமங்கலம் செப்பேடு கூறுகிறது.

முதலாம் இராசேந்திர சோழன் கி.பி 1020 இல் அவனுடைய எட்டாவது ஆட்சி ஆண்டில் வெளியிட்ட கரந்தை செப்பேட்டில் "சத்திரிய சிங்கன் " என்று குறிப்பிடப்படுகிறான்.
அவன் தனது பெயரால் "சத்திரிய சிங்க வளநாடு" என்ற நிர்வாகப் பிரிவையும் ஏற்படுத்தியிருந்தான்.
(The Karandai Tamil Sangam Plates of Rajendra chola I , Memoirs of the Archaeological Survey of India (MASI), No.79, Ed. K.V.Subrahmanya Aiyer, 1949).
முதலாம் இராஜராஜ சோழனின் இன்னொரு பட்டப்பெயர் "சத்திரிய பயங்கரன்". இவர் பெயரால், "சத்திரிய பயங்கர வளநாடு" என்ற ஒரு நிர்வாகப் பகுதி இருந்தது. (தென்னிந்திய கல்வெட்டு தொகுதி 2, பகுதி 1, கல்வெட்டு எண் 1).
.
இராஜராஜ சோழனின் தனிப்பட்ட பாதுகாவலர் படைகளுள் ஒன்று "சத்திரிய சிகாமணி தெரிஞ்ச வலங்கை வேலைக்காரர் " என்ற பெயரில் இருந்தது. தஞ்சை பெரிய கோயில் தெற்கு சுவர் கல்வெட்டு (தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி : 2, பகுதி :1, கல்வெட்டு எண் 1 & 66)

அன்பில் செப்பேடு என்பது சுந்தர சோழன் என்ற இரண்டாம் பராந்தகன் காலத்தில் நான்காவது ஆட்சி ஆண்டில் (கி.பி. 957) வெளியிடப்பட்டது. இது சோழ மன்னர்களின் வம்சாவளி குறித்து பேசுகிறது. பிரம்மன், மனு ஆகியோர் வழிவந்தவர்கள் சோழர்கள் என்றும், சுந்தரசோழன் "சத்திரிய சூடாமணி" என்றும் புகழப்படுகிறான்.

அன்பில் செப்பேட்டில் சமஸ்கிருத பகுதியான பிரசஸ்தியைக் கவிஞர் நாராயணன் மற்றும் பிற்பகுதியை (தமிழில்) மாதவபட்டன் ஆகியோர் எழுதினர். இந்தச் செப்பேடுகளைப் பார்ப்பனர்களே எழுதினார்கள். சுந்தரச்சோழரின் அமைச்சர் அநிருத்த பிரம்மராயருக்கு மயிலாடுதுறை அருகே கருணாகரமங்கலம் என்ற ஊரைத் தானமாக வழங்கியதை இந்தச் செப்பேடு ஆவணப்படுத்துகிறது. அநிருத்தருக்குப் "பிரம்மாதிராஜன் " என்ற பட்டம் வழங்கப்பட்டது. இந்த செப்பேடு, திருமால் உந்தியிலிருந்து பிரம்மனும், அதை எடுத்து மரிசி, காசிபார் , மனு, சிபி, பாகீரதன் போன்றோர் வழிவந்தனர் என்றும், அந்த வழியில் சோழர்கள் பிறப்பெடுத்தார்கள் என்றும் குறிப்பிடுகிறது. சமஸ்கிருதம், தமிழ் என்ற இரண்டு மொழிகளில் இந்த செப்பேடுகள் அமைந்துள்ளன. (Epigraphia Indica, Volume XV, பக். 58- 72. பதிப்பாசிரியர்: டி.ஏ. கோபிநாத ராவ்).

அன்பில் செப்பேடு திருவாலங்காடு செப்பேடு ஆகியவை சோழர் குலத்திற்கு ஆரிய புராணங்களில் தோற்றத்தைத் தேடுகின்றன. இவர்களுடைய காலத்தில் மனு தருமம் பேணப்பட்டது என்பதில் சந்தேகம் இல்லை; சமஸ்கிருதம் உயர்நிலையில் போற்றப்பட்டது என்பதிலும் சந்தேகம் இல்லை.

கரந்தை செப்பேடு முதலாம் இராசேந்திர சோழனின் (கி.பி.1012.. 1044) எட்டாம் ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்டது. இதில் 55 ஏடுகள் உள்ளன. இது சோழர்களை சூரிய வம்சத்தைச் சேர்ந்த சத்திரியர்கள் என்று குறிப்பிடுகிறது. சமஸ்கிருதப் பகுதிக்கான ஆங்கில மொழியாக்கத்தை மேற்கோளாகக் காட்டினால், , முதலாம் இராசேந்திர சோழனை

"He was the Crest - jewel (Shikhamani )of the Kshatriya race, a sun to the darkness of his enemies, and a kalpa-tree to those who sought refuge in him." என்று புகழ்ந்து குறிப்பிடுகிறது.
(Karanthai Tamil Sangam Copper Plate Inscriptions of Rajendra Chola I. , Edited by K.G. Krishnan, Archaeological Survey of India (Memoirs of the ASI, No. 79); SII, Vol.25, No.57-58)

இவ்வாறு சோழர்கள் தங்களைச் சத்திரியர்களாக அடையாளப்படுத்திக் கொள்வது என்பதன் பொருள் என்ன? வர்ணாசிரம முறையை ஏற்றுக் கொண்டதற்கான அடையாளம் இது ஆகும்.

முதலாம் இராசராச சோழன் "சத்திரிய சிகாமணி" என்ற பட்டத்தை ஏற்றிருந்தான். அவனுடைய பெயரில் ஒரு வளநாடு விளங்கியது.
இராஜராஜனின் 29 ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி.1014) தஞ்சை பெரிய கோயிலில் வெட்டிய கல்வெட்டு "சத்திரிய சிகாமணி வளநாட்டு மருகல் நாட்டு இடையன்..." என்று குறிப்பிடுகிறது. (South Indian Inscriptions -SII, Vol. 2, No. 92 ) .

முதலாம் இராசேந்திர சோழனின் திருவாலங்காடு செப்பேடுகள் (கி.பி 1018- 19) சுந்தர சோழரை "சத்திரிய சூடாமணி" என்று குறிப்பிடுகிறது. சத்திரிய சூடாமணி என்பதன் தமிழாக்கமாக "சத்திரியர் தலைமணி வளநாடு" என்ற பெயரில் நிர்வாகப் பகுதி ஒன்று இருந்தது. நாகை, திருவாரூர், கீழ்வேளூர், தேவூர் ஆகிய பகுதிகள் இதில் அடங்கியிருந்தன.
(South Indian Inscriptions (SII), Volume III, Part III, Section 2 (The Tiruvalangadu Copper-Plates, slokas 61 and 62 )

இராசராச சோழன் தனது தந்தையின் நினைவாக 'சத்திரிய சூடாமணி மங்கலம்' என்ற ஊரை உருவாக்கினான். இதனால் சில நேரங்களில் இந்தப் பட்டம் இராசராசனுக்கும் உரியதாகக் கருதப்படுகிறது. ஆனால், செப்பேட்டுச் சான்றுகளின்படி, இது இராசராசனின் தந்தை சுந்தர சோழரையே குறிக்கிறது.

திருவாரூர் தியாகராசர் கோயில் கல்வெட்டுகளில் "சத்திரிய சூடாமணி வளநாட்டுத் திருவாரூர் " என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (தென்னிந்திய கல்வெட்டுகள், தொகுதி 2, கல்வெட்டு எண் 67).

இராசராச சோழனின் தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டில் "சத்திரிய சிங்க வளநாடு" என்று ஒரு நிர்வாகப் பகுதி குறிப்பிடப்படுகிறது. திருச்சிராப்பள்ளி, அரியலூர் மாவட்டப் பகுதிகள் இதில் அடங்கும். (தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி 2, கல்வெட்டு எண் 92).

இந்தக் கல்வெட்டுகளில் இருந்து ஓர் உண்மையைப் புரிந்து கொள்ளலாம். வர்ணாசிரம அடிப்படையில் நாடு இயங்கியது. சமூகத்தின் நான்காவது வருணம் அந்தந்தச் சாதிப் பெயர்களிலேயே அடையாளப்படுத்தப்பட்டது. சோழர்கள் பிரம்மதேயங்களைப் பிராமணர்களுக்கு வழங்கினார்கள். வேதம் ஓதும் பிராமணர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் அளிக்கப்பட்டன. சமூகத்தில் பிராமணர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. சோழர்கள் ஒரு காலத்திலும் வர்ணாசிரம முறையை மாற்ற முற்பட்டதில்லை.

முதலாம் குலோத்துங்க (கி.பி.1070 - 1120) சோழனின் "...மனுநெறி தழைப்ப நால்வகை வருணமுந் தத்தம் நிலைமையில் நிற்ப ... " என்று பேசும் மெய்க்கீர்த்தி "புகழ் மாது விளங்க ... " என்று தொடங்குகிறது.

முதலாம் இராசராசனின் 29 - வது ஆட்சியாண்டில் (கிபி 1014 ) வெட்டப்பட்ட தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டில் "...சத்திரிய சிகாமணி வளநாட்டு மருகல் நாட்டு இடையன்... " என்று குறிப்பிடுகிறது.

முதலாம் இராசராசன் "சத்திரிய சிகாமணி" என்றுபல கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறான். (தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி : 2, கல்வெட்டுகள்: 1, 4, 5, 9 )

மற்றொரு கல்வெட்டில் இராசராச சோழன் பெயரில் அமைந்துள்ள வளநாடு "சத்திரிய சிம்ம வளநாடு..." என்று குறிப்பிடப்படுகிறது. (தென்னிந்திய கல்வெட்டுகள் தொகுதி : 2, எண் 66, 94. )

முதலாம் இராசேந்திர சோழனின் திருவாலங்காடு செப்பேட்டில், தமிழ் பகுதியில்
"... மனுநெறி தழைப்ப சதுர்வேத நெறி வளர ..." என்று வருகிறது.

(தென்னிந்திய கல்வெட்டுகள், தொகுதி : 3, திருவாலங்காடு செப்பேடுகள்). முதலாம் இராசேந்திர சோழன் வர்ணாசிரம தர்மத்தை ரட்சித்தவன் பாதுகாத்தவன் என்று இக்கல்வெட்டுப் புகழாரம் சூட்டுகிறது.

திருவாரூர் தியாகராசர் கோயிலில் உள்ள இரண்டாம் இராசராசனின் 15 - வது ஆட்சியாண்டில் (கிபி 1161) வெட்டப்பட்ட, "பூமருவிய பொழிலேழும் ... " என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியில், வர்ணாசிரம பாதுகாப்பு குறித்த சான்று உள்ளது.
" மனுநெறி தழைப்பச் சதுர்வேத நெறி வளர"
"வர்ணாச்சிரமந் தழைப்பத் தர்மஞ் செழிக்க..." என்று வருகிறது. நான்கு வருணங்களையும், நான்கு ஆசிரமங்களையும் (பிரம்மச்சாரிய, கிரகஸ்தா, வனப்பிரஸ்தா, சன்னியாசின் ஆகியவை) பாதுகாத்தான் என்று இக்கல்வெட்டு கூறுகிறது. (தென்னிந்திய கல்வெட்டுகள், தொகுதி : 8, எண் : 163)

முதலாம் இராசராச சோழன் தன் 29- வது ஆட்சி ஆண்டில் (கிபி 1014), தஞ்சை பெரிய கோயில் தெற்குப் புற சுவரில் வெட்டுவித்த கல்வெட்டில் நிர்வாகப் பிரிவுகளான ஒன்பது வளநாடுகளின் பெயர்களையும் குறிப்பிடுகிறான். இதில் நிர்வாகப் பிரிவான "சத்திரிய சிம்ம வளநாடு" என்பதும் குறிப்பிடப்படுகிறது. இதில் இராசராசன் கோயிலுக்கு நேரடியாக வழங்கிய நிலக் கொடைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

முதலாம் இராசேந்திர சோழனின் 31- வது ஆட்சி ஆண்டில் (கிபி 1043) திருவாலங்காடு செப்பேடுகள் வெளியிடப்பட்டன. திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருவாலங்காடு வதாரண்யேஸ்வரர் கோயிலுக்குப் பழையனூர் என்ற கிராமத்தை தேவதானமாக வழங்கியதையே திருவாலங்காடு செப்பேடு குறிப்பிடுகிறது. இந்தச் செப்பேட்டில் சோழ வம்சத்தின் வம்சாவளி விரிவாகக் குறிப்பிடப்படுகிறது. சோழ வம்சாவளியைப் புராணப் பின்னணியில் சமஸ்கிருதப் பகுதி விரிவாக விவரிக்கிறது. சோழர்கள் சூரியவம்சத்தினர் என்றும், சூரியனிலிருந்து மனு, அதன் பிறகு இக்ஷ்வாகு , சிபிச் சக்கரவர்த்தி, காவேரிகண்டன், கரிகால் சோழன், கோச்செங்கணான் போன்றோர் வழியில் சோழர்கள் வந்ததாகக் குறிப்பிடுகிறது. (விஷ்ணு புராணம் ஸ்ரீமத் பாகவதம் ஆகியவை குறிப்பிடுகிறபடி, வைவஸ்வத மனுவின் மகன் மனு ஆவார். புராணங்கள் கூறுகிறபடி, நீண்ட காலம் குழந்தைகள் இல்லாமல் இருந்த மனு ஒரு தும்மல் போட்டதில் இக்ஷ்வாகு பிறந்தார். இவர் அயோத்தியைத் தலைநகராகக் கொண்டு கோசல நாட்டை ஆளத் தொடங்கினார். இவரே அயோத்தியின் முதல் மன்னர். மனுதர்மத்தை பூமியில் முறையாக அமல்படுத்திய முதல் அரசர். வால்மீகி இராமாயணத்தில் வரும் இராமர் இக்ஷ்வாகு வம்சத்தைச் சேர்த்தவர். ) அந்த இக்ஷ்வாகு வம்சத்தில் வந்த சிபி சக்கரவர்த்தி போன்றோரை இராசேந்திர சோழனின் முன்னோர்களாக இது குறிப்பிடுகிறது. சோழர்கள் மரபுக்குப் புராண அடிப்படையில் பிறப்பு, தெய்வீகத்தன்மை போன்றவற்றைக் கற்பிக்கிறது.

வடமொழிப் பகுதியில் 69 மற்றும் 70 ஆவது சுலோகங்களின் பகுதிகளில் இராசேந்திர சோழனின் ஆட்சித் திறத்தைப் பற்றிக் கூறும்போது:
உலகில் கலியுகத்தினால் ஏற்படும் குழப்பங்களை நீக்கி, நான்கு வருணங்களையும் அவற்றிற்குரிய கடமைகளில் நிலை நிறுத்தி வர்ணாசிரம தர்மம் தவறாமல் காத்தவன் என்று திருவாலங்காடு செப்பேடு பதிவு செய்கிறது.

இது இராசராச சோழனின் மகன் பற்றியது; இராசராச சோழனின் தந்தையாகிய சுந்தரச் சோழரைப் பற்றியும் திருவாலங்காடு செப்பேடு இப்படி கூறுகிறது:
(வடமொழிப் பகுதியில் 57- வது சுலோகத்தில்) "கலியுகத்தின் தாக்கத்தால் தளர்ந்து போன தனது சட்டங்களை மனுநீதி மீண்டும் நிலை நாட்டுவதற்காக மனுவே இந்த மன்னன் உருவில் மீண்டும் பூமிக்கு வந்திருப்பதாக மக்கள் நம்பினர்.
(Verse 57: "The mass of people believe this king to be Manu, who, out of Love for the (good ) conduct which was set forth by himself, has come to the earth once again to establish his law which had become lax under the influence of the Kali (age ) ."

சமுதாய அடுக்கைக் குறிக்கும் போது நான்கு வர்ணங்களும் (சதுர்வர்ணங்கள்) தத்தம் தர்மங்களைப் பின்பற்றி வாழ்ந்ததாகச் செப்பேட்டின் சமஸ்கிருத மெய்க்கீர்த்திப் பகுதி குறிப்பிடுகிறது. நான்காவது வர்ணத்தைக் குறிக்க சதுர்த்த வருணம் என்று சமஸ்கிருத பகுதி குறிக்கிறது. ஆனால் தமிழ்ப் பகுதியில் வேளாளர் என்று வருகிறது.

சங்ககாலத்தில் இருந்தே ஆரியத்துக்கு அடிமைப்பட்ட மன்னர்கள் இருந்து வந்திருக்கின்றனர். இராசசூயம் வேட்ட பெறுநற்கிள்ளி, பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி, மனுநீதிச் சோழன் என்ற பெயர்கள் தமிழ் மன்னர்களின் ஆரிய அடிமைத்தனத்தைக் காட்டவில்லையா?

இடைக்காலத்தில் கலிங்கத்துப்பரணி "மனுவினுக்கு மும்முடி நான் மடியாஞ் சோழன்..." என்று கூறுகிறது.

"தருமநெறி நிற்ப மனுநெறி நடத்திய கோவிராசகேசரி வர்மரான உடையார் ஸ்ரீ ராஜ மகேந்திர தேவர் " என்ற கல்வெட்டு வரிகள் இரண்டாம் இராசேந்திர சோழனின் தம்பியான இராச மகேந்திரன் என்பவன் மனுநீதி போற்றியதைப் பதிவு செய்கிறது.

முதல் குலோத்துங்கன் "மனு குல தீபன் " என்ற சிறப்புப் பெயரை எடுத்துக் கொண்டான். அவனுடைய ஒரு மெய்க்கீர்த்தி இவ்வாறு புகழ்கிறது:

"...மனுவாறு பெருகக் கலியாறு வறப்பச்
செங்கோல் திசைதொறுஞ் செல்ல..."

சோழ மன்னர்களின் மெய்க் கீர்த்திகள் இந்த மன்னர்கள் எப்படி ஆரிய அடிமைகளாக இருந்தார்கள், எப்படி மனுதர்மத்தை நிலை நிறுத்தினார்கள் என்பதைப் பதிவு செய்கிறது.

இரண்டாம் குலோத்துங்கனுடைய மெய்க்கீர்த்தியில்,
"மன்னுயிர் தழைப்ப மனுவாறு விளங்க
மாதவர் தவமும் மங்கையர் கற்பும்
ஆதி அந்தண ராகுதிக் கனலு
மீதெழு கொண்டல் வீசுதண் புனலு
மேதினி வளருஞ் சாதி ஒழுக்கமும்
நீதி அறமும் பிறழாது நிகழப்
பாவம் பழனப் பரப்பும் பணைக்கை
மாவு மல்லது வன்றளைப் படுதல்..." என்று புகழப்படுகிறான்.

அதாவது, இரண்டாம் குலோத்துங்கன் மனுதர்மம் விளங்கச் செய்தானாம்; சாதி ஒழுக்கத்தைக் காத்தானாம்.

இரண்டாம் இராசராச சோழன் மெய்க்கீர்த்தியில்,
"... அருமறை விதிநெறி யனைத்துந் தழைப்ப
வருமுறை யுரிமையில் மணிமுடி சூடி
திங்கள் வெண்கொடை திசைக்களிரட்டும் ... "
என்று புகழப்படுகிறான். இவனுடைய ஆட்சிக் காலத்தில் மறைநெறி நிலைநிறுத்தப்பட்டது.

இரண்டாம் இராசாதிஇராச சோழனது மெய்க்கீர்த்தியில்,
" சமய மாறும் தலையெடுப்பத்
தருமமும் மரு மறையு மோங்கி அமைவில்லா மனுவொழுக்க
மாதியாம்படி நிலை நிற்க... "

என்று பேசப்பட்டுள்ளது. ஆறுவகை சமயமும், வர்ணாசிரம தர்மம், மறைகளும், மனுநீதி வரையறுத்த ஒழுக்கமும் வளர்க்கப்பட்டதாகப் பதிவு செய்கிறது.

மூன்றாம் குலோத்துங்க சோழனது மெய்க்கீர்த்தி,
"... புயல் பெருக வளம் பெருகப் பொய்யாத நான்மறையின் செயில் வாய்ப்பத் திருமகளும் சயமகளும் சிறந்து வாழ ..."
என்று நான்மறை ஆதிக்கம் செலுத்தியதைப் பதிவு செய்கிறது.

மூன்றாம் இராசராச சோழனது மெய்க்கீர்த்தி,
"....ஒப்பறிய மறை நூலும் உரை திறம்பா மனு நூலுஞ்
செப்பறிய வடகலையும், தென்கலையுந் தலையெடுப்ப
நீதிதரு குலநான்கும் நிலை நான்கு நிலை நிற்ப
ஆதியுகங் குடிபுகுத அறுசமயம் தழைத்தோங்க ..." என்று பேசுகிறது.

இவனுடைய ஆட்சியில், வேதங்கள் சிறப்பிக்கப்பட்டதையும், மனுநூல் பின்பற்றப்பட்டதையும், வடகலையும் தென்கலையும் செழித்ததையும், மனு சாத்திரம் வகுத்துத் தந்த நான்கு வர்ணங்களும் நிலைநிறுத்தப்பட்டதையும், ஆறு வகைச் சமயங்கள் தழைத்தோங்கியதையும் பதிவு செய்கிறது.

மூன்றாம் இராசேந்திர சோழனது மெய்க்கீர்த்தி
" ...வீரராட்சசன் எனப் போற்றப்படுபவனும், லங்காராமன் என்னும் பெயருடையானும்,
மனுக் குலத்தை உயர்த்தியவனும், ... " என்று தொடர்கிறது.

இந்தப் பதிவுகள் அனைத்தும் சோழ அரசர்கள் மனுதர்மத்தைக் கடைபிடித்தனர் என்பதையும், நாட்டில் நடைமுறைப்படுத்தினர் என்பதையும் தெளிவாகப் பதிவு செய்கின்றன.

இந்தச் சோழ மன்னர்கள் காலத்தில் பார்ப்பனர்களுக்கு ஏராளமான பிரம்மதேயங்களை வழங்கியதும், அவர்களுடைய நலன் பாதுகாக்கப்பட்டதும், சமூகத்தில் சாதிகளும், சாதி அடிப்படையில் படிநிலைத் தகுதிகளும் உருவாக்கம் பெற்றதும், அடிமை முறை விரிவாக்கம் பெற்றதும், சாதி அடிப்படையில் இழிவுகளும், துயரங்களும் எளிய மக்கள் மீது சுமத்தப்பட்டதும் சோழர்கள் கால வரலாற்றின் மறைக்க முடியாத ஒரு கூறு தான்.

சோழர்கள் காலத்தில் வர்ணாசிரம முறை ஏற்கப்பட்டிருந்தது என்பதற்கு ஏராளமான கல்வெட்டு மற்றும் செப்பேட்டுச் சான்றுகள் இருக்கின்றன. இந்நிலையில் சோழர்கள் காலத்தில் வர்ணாசிரம முறையே கிடையாது என்றும், ஏற்றத்தாழ்வு என்பதே கிடையாது என்றும் எழுதுவது அப்பட்டமான பொய்யல்லவா? ஒரு நிலவுடைமை காலகட்டத்தின் அத்தனை சமூக ஒடுக்கு முறைகளும் துயரங்களும் சோழர்கள் காலத்திலும் இருந்தன; அதன் பிறகும் அவை தொடர்ந்தன. சோழர்கள் காலத்தில் ஏராளமான கோயில்கள் கட்டப்பட்டன; வேளாண்மை தகவமைப்புகள் உருவாக்கப்பட்டன; பல நாடுகள் வெற்றி கொள்ளப்பட்டன. ஆனால் அதே நேரம் மக்களில் ஒரு பகுதியினர் தங்களை அடிமைகளாக விற்றுக் கொண்டனர் என்ற நிலையும் இருந்தது. உடன்கட்டை ஏற்றும் பழக்கமும் இருந்தது. பெண்களை அடிமைகளாகக் கோயில்களுக்கும் பெருமக்களுக்கும் விற்கும் பழக்கம் இருந்தது. இவை கடந்த கால உயர்வும் துயரங்களும்.

இந்நிலையில், சோழர்கள் தமிழ் மன்னர்கள் என்று கூறி, அதைப் பொற்காலம் எனப் போற்றுவதும், அதைத் தங்கள் அடையாளமாக முன்னிறுத்துவதும் மிகவும் பிற்போக்குத்தனமானது. சோழ மன்னர்கள் தங்கள் சாதிக்காரர்கள் என்று எந்த அடிப்படையுமின்றி சில சாதிகள் சொந்தம் கொண்டாடுவதும், தாங்கள் ஆண்ட சாதிகள் என்று பெருமை பேசுவதும், சாதி உணர்வை விசிறி விடுவதும், பிற சாதிகளை அடக்கி ஆள முற்படுவதும், நாம் அடைந்து விட்டதாகக் கருதும் சனநாயக அரசு முறையையும், சனநாயக சிந்தனையையும் கேலி செய்வதாகும்.

தமிழ்த் தேசிய இனத்தின் பொற்காலம் எதிர்காலத்தில் இருக்கிறது; கடந்த காலத்தில் இருந்ததாகக் கற்பனை செய்து கொண்டு மயங்கக் கூடாது.

# ஈஷாவின் சிவதாண்டவம் யாருக்கானது? யாரை ஏமாற்றுவது? கலந்துகொண்ட திமுகவினர் மீது அந்தக் கட்சி நடவடிக்கை எடுக்குமா?

கோவை ஈஷா மையத்தில் ஒவ்வோர் ஆண்டும் சிவ இரவு என்கிற பெயரில் கூத்தாட்டங்கள் நடைபெறுகிறன.

குடியரசுத் தலைவர் , தலைமையமைச்சர், பல மாநிலங்களின் ஆளுநர்கள், நடிகர்கள், நடிகைகள், இசைக் கலைஞர்கள் எனப் பலர் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்கள்.

பெரும்பாலான கட்சிகளும் அதில் பங்கேற்கின்றன..

இந்த ஆண்டு பாஜகவின் இராஜ்நாத் சிங், எல்.முருகன், அதிமுகவின் எஸ்.பி.வேலுமணி, திமுக பொள்ளாச்சி எம்.பி ஈஸ்வர மூர்த்தி, திமுக மாவட்டச் செயலாளர் இரவி, த.வெ.க தலைவர் விசய்யின் அம்மா சோபா, தேமுதிக பிரேமலதா உள்ளிட்டோர் கலந்து கொண்டதாகச்.சொல்லப்படுகிறது. சென்ற ஆண்டு ஜி.கே. வாசனும், கர்நாடகத்தின் துணை முதல்வர் சிவகுமாரும் கலந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்களன்றி இந்திய, மாநிலங்களின் உள்ள உயரதிகாரிகள் பலர் குடும்பத்துடன் பங்கேற்றிருக்கின்றனர். தொழில் அதிபர்கள் பலரும்கூட தவங்கிடந்திருக்கின்றனர்..

ஈஷா எத்தனை ஏமாற்றுகள் செய்கிறது என்பது ஊ ரறிந்த செய்தி.., எவ்வளவு அட்டூழியங்கள், உயிரிழப்புகள் அங்கு நடந்தாலும், நேரடியாகவோ மறைமுகமாகவோ அனைத்துக் கட்சியினரும் அவர்களைக் காப்பாற்றுகின்றனர்!

இந்திய அரசின் கைப்பாவையாக அவர்கள் இயங்குவதால், உச்சநெறிமன்றமும் வாய்பொத்திக் கிடக்கிறது.

தமிழ்நாடு அரசும் பெரிய அளவில் எதிர்க்கும் திட்டம் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

ஆனால் திமுக ஒன்றைச் செய்தாக வேண்டும். ஈஷா சிவதாண்டவ நிகழ்ச்சியில் பங்கேற்ற திமுக வினர் மீது நடவடிக்கையாவது எடுத்தாக வேண்டும்.



"தமிழ்க்கெனப் பிறந்து தமிழ்க்கென வளர்ந்து
தமிழ்க்கெனப் பயின்று தமிழ்க்கெனப் பயிற்றித்
தமிழ்க்கென ஓய்ந்து தமிழ்க்கென ஆய்ந்து
தமிழ்க்கென வாழ்ந்த தமிழே வாழி"

தமிழே திரவிடத்திற்குத் தாயும்
ஆரியத்திற்கு மூலமும்..
என்றும்,
தமிழன் பிறந்தகம்
குமரிக்கண்டமே..
என்றுமான உண்மைகளை மொழியியல்
புலத்தில் நிறுவுவதற்காகத் தம் வாழ்நாள்
முழுவதும் உழைத்த
மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர்
நூல்களைப் படிப்போம்! பரப்புவோம்!..
பாவாணர் புகழ் ஓங்குக!
பாவாணரின் 125 ஆம் பிறந்த நாள்..

# சாதியும் புரட்சியும் -திறனாய்வு

● தங்க. குமரவேல்

**வடிவமைப்புத் திறனாய்வு**

சாதியும் புரட்சியும் என்னும் இந்நூல் என். இரவி அவர்களால் எழுதப்பட்டுத் தோழர்கள் பிரேம், விவேக் ஆகியோரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மேலும் இந்நூல் தெலுங்கு, இந்தி, பஞ்சாபி, மொழிகளில் வெளிவந்துள்ளது.

இந்நூல் மஞ்சள் நிற அட்டையைக் கொண்டுள்ளது. முன் அட்டையில் உள்ள படம் மக்கள் புரட்சி வெடிக்கும் போது சாதியம் தலை தெறிக்க ஓடும் என்பதைக் காட்டுகிறது. உயர்த்திய கையைக் கொண்ட ஓர் ஆளின் உருவாக்கத்துக்குள் மக்கள் திரள் இருப்பதைப் போன்ற படம் ஒவ்வொரு நபர்களுக்குள்ளும் ஒரு மக்கள் திரள் சிந்தனை இருக்க வேண்டும் என்பதைச் சுட்டுகிறது. மேலும் அந்த ஓவியம் ஆண், பெண் பாலினம் பிரிவு காட்டாதபடி தோற்றம் அளிக்கிறது. இது மேற்குலக நாடுகள் கம்யூனிச பூதம் என்று வர்ணித்ததை நினைவூட்டுகிறது.

பின் அட்டையில் உள்ள நவீன ஓவியம் சுரண்டப்பட்ட வர்க்கமும், ஒடுக்கப்பட்ட சாதிகளும் ஒருவருக்கொருவர் அரவணைத்து நெருங்கி ஒற்றுமையுடன் போராட்டக் களத்தில் நிற்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. அதில் காட்டப்பட்டிருக்கும் இராணுவ உடை ஆயுதப் புரட்சியைக் குறிக்கிறது.

சிந்தன் புக்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள சாதியும் புரட்சியும் என்னும் நூல் 136 பக்கங்களைக் கொண்டது. இந்நூல் தமிழில் முதல் பதிப்பாகும். சிந்தன் புக்ஸ் நிறுவனத்தின் பதிப்புரையும் தோழர் நா்ள என். இரவி அவர்களின் ஆசிரியர் குறிப்புடனும் இந்நூல் உள்ளது. இந்நூலில் ஐந்து கட்டுரைகள் உள்ளன கெட்டித் தாளில் அச்சிடப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. எழுத்துரு இன்னும் கொஞ்சம் பெரிதாக இருந்தால் வாசிப்பவர்களுக்குச் சிரமத்தை ஏற்படுத்தாது. நூலின் மொழி நடை ஓரளவு மார்க்சியம் தெரிந்தவர்களுக்குப் புரியும் அளவில் உள்ளது. நூலின் விலை சற்று அதிகமாக உள்ளது. மக்கள் பதிப்பாக வெளியிட்டால் சென்றடையும் பரப்பு அதிகரிக்கும், பல்வேறு இடதுசாரி இயக்கங்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

**உள்ளடக்கத் திறனாய்வு**

சாதியும் புரட்சியும் என்னும் இந்நூலில் பதிப்புரை, ஆசிரியர் குறிப்பு நீங்கலாக ஐந்து கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. முதல் கட்டுரை

**சாதிப் பிரச்சனை குறித்த வர்க்க புரிதலை நோக்கிய ஒரு குறிப்பு** என்னும் தலைப்பினால் ஆனது இந்தக் கட்டுரை சாதிக்கும் வர்க்கத்துக்குமான உறவு, ஆங்கிலேய ஆட்சியில் சாதிக்கும் வர்க்கத்துக்குமான இடையில் மாற்றம் அடைதல், சாதிக்கும் வர்க்கத்துக்கும் உள்ள உறவு, மக்கள் போராட்டங்களின் தாக்கம், முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் தாக்கம் முதன்மையானது. சாதியா? வர்க்கமா? சாதி அடித்தளம் மற்றும் மேல் கட்டுமானம் குறிப்பிடப்பட்ட மாற்றங்கள் ஏற்பட்ட போதும் சாதி நீடித்து இருக்கக் காரணம் என்ன? கம்யூனிஸ்டு இயக்கத்திற்கும் தலித் இயக்கத்திற்கும் இடைவெளி ஏற்பட்டது ஏன்? சாதி எதிர்ப்புப் போராட்டங்களின் முதல் அலை மற்றும் இரண்டாம் அலை அம்பேத்கரும் அம்பேத்கரியமும் என்பன குறித்துப் பேசுகிறது.

இந்தியாவில் சாதி நிலப்பிரபுத்துவம் 150 ஆண்டுகளில் பல மாற்றங்களைக் கண்டுள்ளது. இந்த மாற்றத்திற்கு நில உடைமையாளர்களின் சாதி கொடுங்கோன்மையும் உழைப்புச் சுரண்டலையும் எதிர்த்த மக்கள் போராட்டங்கள் ஆங்கிலேயக் குடியேற்ற அரசு கொண்டுவந்த முதலாளித்துவ உற்பத்தி முறை ஆகிய இரண்டும் காரணம் என இக்கட்டுரை கூறுகிறது.

இந்தியாவில் ஆதிக்கச் சாதியினரே சுரண்டும் வர்க்கமாகவும் ஒடுக்கப்படும் சாதியினரே உழைக்கும் வர்க்கமாகவும் இருந்த நிலையைக் காட்டி பின்னர் ஆங்கிலேயர் கொண்டு வந்த முதலாளித்துவ உற்பத்தி, நவீனக் கல்வி ஆகியவற்றின் காரணமாகப் பல்வேறு சாதிகளில் இருந்தும் ஒடுக்கும், ஒடுக்கப்படும் வர்க்கங்கள் உருவான நிலையை இக்கட்டுரை பேசுகிறது. பெரியார், அம்பேத்கர் போன்ற சீர்திருத்தவாதிகளுடைய கடும் உழைப்பால் கிராமப் புறங்களில் நிலவிய பார்ப்பன ஆதிக்கம் மற்றும் நிலத்துடனான பார்ப்பனர்களின் உரிமை ஆகியவற்றைக் கேள்விக்குள்ளாக்கியாதோடு சூத்திர சாதிகளிலிருந்து புதிய நிலவுடைமையாளர்களைத் தோற்றுவித்தது. மேலும் ஆங்கிலேயர் கொண்டு வந்த நவீனக் கல்வியைப் படித்து அதனால் அரசு வேலை வாய்ப்பைப் பெற்ற ஒரு நடுத்தர வர்க்கம் உருவானது என்று இந்தக் கட்டுரை கூறுகிறது. இது இந்தியாவில் சாதிகள் பற்றிப் புரிந்து கொள்ள உதவிகரமாக இருக்கிறது.

இட ஒதுக்கீடும் இந்த நடுத்தர வர்க்கம் உருவாகத் துணை புரிந்ததை கட்டுரை விளக்குகிறது.

இந்த மாற்றத்தில் தெலுங்கானாவில் நடைபெற்ற விவசாயிகளின் ஆயுதப் போராட்டங்களின் பங்களிப்பைப் பற்றியும் "உழுபவனுக்கே நிலம்"சொந்தம் என்னும் முழக்கத்தின் கீழ்த் தலித்துகள் அணி திரட்டப்பட்டதை இக்கட்டுரை கூறுகிறது. சூத்திர சாதியினருக்கு எதிரான சாதி ஒடுக்குமுறை பெரும்பாலும் ஒழிந்துவிட்டது அது இன்னும் இருக்கும் இடங்களில் அதை ஒழிப்பதை நோக்கியே பொதுபோக்கு உள்ளது. சாதி ஒடுக்கு முறையின் வீச்சு குறுகி, அது தற்போது முதன்மையாகத் தலித்துகளை அடக்கி ஒடுக்குவதாக இருக்கிறது. தலித்துகளைப் பொறுத்தவரை, வர்க்கத்திற்கும் சாதிக்கும் இடையிலான தொடர்பு பெரும்பாலும் தொடர்கிறது. இக் கட்டுரை கூறும் மேற்கண்ட கருத்து ஏற்புடையதாக உள்ளது.

முதன்மையானது சாதியா? வர்க்கமா?என்னும் கேள்வியை எழுப்பி எல்லா சாதிகளிலும் ஒடுக்கும் ,ஒடுக்கப்படும் வர்க்கங்கள் உருவாகி இருப்பதைச் சுட்டிக்காட்டி வர்க்க அடையாளமே முதன்மையானது என்றும் சாதி அடையாளத் திரட்சி எதிரி வர்க்கத்துக்கு சாதகமாகவே அமையும் என்பதை இந்தக் கட்டுரை தெளிவாக்குகிறது.

இந்தியக் கம்யூனிஸ்டுகள் சாதியை இந்தியாவிற்குரிய சிறப்பு வர்க்கத்தின் ஒரு வடிவம் என்பதை உணராமல் மேல் கட்டுமானமாகக் கருதியதும் அடித்தளம் மாற்றப்பட்டால் மேல் கட்டுமானம் தானாகவே சிதையும் என்றும் தவறான புரிதலுக்கு ஆளானார்கள். அதனால் தொழில் சங்கங்களில் ஏற்பட்ட சாதிப் பிரச்சனைகளையும் பொதுவான சாதிப் பிரச்சனைகளையும் தலையிட்டுத் தீர்ப்பதற்கு முன்னுரிமை கொடுக்கவில்லை. இதனால்தான் தலித்துகள் கம்யூனிஸ்டுகளிடம் நம்பிக்கையை இழந்து தலித் இயக்கங்கள் உருவானதாக இக்கட்டுரை கூறுகிறது.

ஆனால் இந்தியக் கம்யூனிஸ்டுகளின் தவறான புரிதல் மட்டுமே இதற்குக் காரணம் என்று நாங்கள் கருதவில்லை 1990களில் உலகமயமாக்கலை இந்தியா ஏற்றுக்கொண்ட போது பின் நவீனத்துவத்தின் பின்னணியில் தலித் இயக்கங்கள் உருவாக்கப்பட்டன. எதிர் பண்பாட்டுக் கூறுகள் தூக்கிப் பிடிக்கப்பட்டுப் புனிதம் உடைத்தல் என்னும் பெயரிலும் அதிகார எதிர்ப்பு என்னும் பெயரிலும் சீரழிவு நுகர்வுப் பண்பாட்டைத் தலித் பண்பாடாகவும் அமைப்பாய்த் திரள்வதே ஒரு வன்முறை என்றும் கற்பிக்கப்பட்டுப் படித்த ஒரு தலைமுறை தலித்துகள் பாழடிக்கப்பட்டனர். மேலை நாடுகள் இந்தியாவில் இருக்கும் தலித்துகள் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சிகளிடம் அணி திரள்வதை விரும்பவில்லை. இந்திய ஒன்றிய அரசும் இதை விரும்பவில்லை எனவே தலித்துகளைக் கம்யூனிஸ்ட் இயக்கங்களின் கீழ் அணி திரளாமல் தடுத்தாட் கொள்ளவே தலித் இயக்கங்கள் உருவாக்கப்பட்டன. பின் நவீனத்துவம் என்னும் கலைப்பை நமது புரட்சிகர கம்யூனிச இயக்கங்களில் சாதி அடிக் கட்டுமானத்தின் மீதும் மேல் கட்டுமானத்தின் மீதும் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்த உண்மையான அரசியல் அறிவை போதிக்கும் கட்சிக் கல்வியை நடத்த முன்னுரிமை அளிக்க வேண்டும்.

மேலும், இந்தியா முழுமையும் உள்ள தலித்துகளின் வாழ்வியல் நிலைகளும் அடக்குமுறை அளவீடுகளும் காரணிகளும் ஒரே தன்மையுடையவையல்ல. கிழக்கு மாநிலங்களின் தலித்துகளின் வாழ்நிலை தென் மாநிலங்களின் தன்மையிலிருந்து வேறுபட்டது. காசுமீரத்தில் நிலை வேறு. இதனால் அகில இந்திய அளவில் தலித்துகள் ஒரே காரணத்தில் ஓரணிசேர வாய்ப்பில்லை.

இந்நூலில் 30 ஆம் பக்கத்தில் கூறப்பட்டுள்ள கருத்துப்படி இந்தியாவில் முழுமையடையாத அரை முதலாளித்துவமும் தேர்தல் சனநாயக முறையும் சாதியைத் தக்கவைக்கின்றன என்பது உண்மையாகவே உள்ளது. ஆனால் இட ஒதுக்கீடு சாதியைத் தக்க வைக்கிறது என்ற கருத்து ஏற்புடையது அல்ல.

இட ஒதுக்கீடு சாதியை ஒழித்துவிடும் என்ற நம்பிக்கையிலிருந்து பார்ப்பதால் இட ஒதுக்கீடு சாதியைத் தக்க வைப்பதாக நூல் ஆசிரியருக்குத் தெரிகிறது. உண்மையில் இட ஒதுக்கீடு சாதியை ஒழிக்காது என்பதை நாம் அழுத்தம் திருத்தமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இட ஒதுக்கீடு என்பது இருக்கும் சாதிகளுக்கு இடையே ஆன வகுப்புவாரியாகும் கல்வி, வேலைவாய்ப்பு உரிமையைத் தவிர சாதி ஒழிப்புக்கும் அதற்கும் தொடர்பு இல்லை. பள்ளத்தில் இருப்பவனை மேடேற்றும் முயற்சியே இட ஒதுக்கீடு ஆகும். சாதி சான்றிதழ் இருப்பதால்

சாதி வளர்கிறது என்னும் வாதம் போன்றது மேற்கண்டதாகும். இட ஒதுக்கீட்டைச் சாதி ஒழிப்புக்கான ஒரு சிறு கருவியாக மாற்ற வேண்டும். ஆனால் சாதி மறுப்புத் திருமணங்கள் செய்தோருக்குக் கல்வி, வேலை வாய்ப்புகளில் தனி இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். மேலும் அந்த இணையர்களுக்குப் பிறந்த குழந்தைகளைச் சாதி அற்றோர் என அறிவித்து அவர்களுக்கான புதிய இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்த வேண்டும்.

முதலாளித்துவ உற்பத்திமுறை முழுமை பெறும்போது நிலவுடைமை உற்பத்தி முறையை அடி கட்டுமானமாகக் கொண்ட சாதிமுறை தகர்க்கப்பட வேண்டும். ஆனால் இந்தியாவில் முதலாளித்துவம் முழுமை பெறவில்லை. மேலும் இந்திய கிராமப் புறங்களில் உள்ள நில உடமையாளர்களே நகர்ப்புறங்களில் முதலாளிகளாகப் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளனர். எனவே இந்திய முதலாளித்துவத்தில் நிலவுடைமையின் உற்பத்தி முறையின் கூறுகள் ஊடுருவி உள்ளன. மேலும் சாதியைப் பாதுகாக்கிற மேல் கட்டுமானங்களான வேதம், புராணம், சாஸ்திரம், சடங்கு, கடவுள், புனிதம் போன்ற கற்பிதங்கள் வலுவாக உள்ளன. இந்த நிலையில் ஏகாதிபத்தியத்தின் நுழைவும் நிகழ்ந்துள்ளது. இந்தியாவை ஆளும் வலதுசாரி பிற்போக்கு மதவாத அரசு உள்நாட்டில் சாதியைப் பாதுகாக்கும் நிலையிலும் வெளிநாட்டுக் கொள்கையில் ஏகாதிபத்தியத்திற்குச் சேவை செய்யும் நிலையையும் ஒரே நேரத்தில் எடுக்கின்றன. இந்த இரட்டை நிலையும் சாதியைப் பாதுகாக்க உதவியாக இருக்கிறது.

இந்நூலில் 32- ஆம் பக்கத்தில் ஆசிரியர் கூறுவது போல சீர்த்திருத்தங்கள் எப்போதுமே ஒருவர் ஒழிக்க விரும்பும் அமைப்புக்கு மேலும் உயிர் கொடுப்பதில்தான் முடிவடையும் என்பதை முழுமையாக ஏற்க முடியாது. பழைய இறுக்கமான பிற்போக்குவாதக் கட்டமைப்பை முதலாளித்துவ சீர்திருத்தங்கள் தளர்வை ஏற்படுத்தும் என்பதே உண்மை. எடுத்துக்காட்டாகப் பொது போக்குவரத்து வளர்ந்துள்ளன. பேருந்து, தொடர்வண்டி, கப்பல், வானூர்தி போன்றவற்றில் சாதி பார்த்து பயணம் செய்வது இயலாத காரியம் ஆகும். சாதி அமைப்பின் ஒரு கூறான தீண்டாமையை அடியோடு உடைத்தெறிந்ததே இந்தப் போக்குவரத்துச் சீர்திருத்தம் ஆகும். மேலும் ஆங்கிலேயர்கள் உடன்கட்டை ஏறுதல் உள்ளிட்ட பல்வேறு நிலப்பிரபுத்துவ மூடப் பழக்கவழக்கங்களைத் தங்கள் சீர்திருத்தங்களால் ஒழித்துக் கட்டியது என்பது வரலாறு.

சாதி எதிர்ப்புப் போராட்டங்களை முதல் அலை இரண்டாம் அலை என இரு பிரிவுகளாகப் பிரித்து இந்த நூல் ஆசிரியர் என். இரவி ஆராய்கிறார்.

முதல் அலையில் இடைநிலைச் சாதிகளின் பெரும்பான்மை யினரையும் தலித் சாதிகள் சிறுபான்மையினரையும் கொண்டு இயங்கிய சுயமரியாதை இயக்கம், நீதிக் கட்சி, திராவிடர் கழகம் போன்ற இயக்கங்களின் போராட்டங்களால் கிராமங்களில் உள்ள நிலங்களின் மீதான பார்ப்பனர்களின் ஆதிக்கமும், நிலங்களும் பறிக்கப்பட்டு அவர்கள் கிராமங்களை விட்டு வெளியேற்றப்பட்டனர். இடைநிலை சாதிகள் அந்த அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். தலித்துகளுக்கு மிகச் சிறிய உரிமைகளே கிடைத்தன இவ்வாறு அவர் கூறுவது சரியான பகுப்பாய்வாக உள்ளது.

கம்யூனிஸ்டுகள் மீதும் இடைநிலைச் சாதிகள் இயக்கங்களின் மீதும் நம்பிக்கை இழந்த தலித்துகள் தங்கள் விடுதலையைத் தாங்களே சாதித்துக் கொள்ள தலித் இயக்கங்களைத் தோற்றுவித்தனர். ஏகாதிபத்திய எதிர்ப்பே தலித் விடுதலைக்கு வழி என்பதைப் புரிந்து கொள்ளாததால் அவர்கள் சரியான திசை வழியில் செல்லாமல் தேங்கி நின்றனர் என்று சரியாகவே மதிப்பிடுகிறார் நூல் ஆசிரியர். தலித் இயக்கங்களுக்கு அரசு ஆதரவு இருந்ததைச் சுட்டிக்காட்டி அவர்கள் புரட்சிகர வழிகளில் செல்வதைத் தடுப்பதே நோக்கம் என்பதைச் சரியாகவே சொல்கிறார்; நாமும் அதனை ஏற்கிறோம்.

அம்பேத்கரும் - அம்பேத்கரியமும் என்னும் கட்டுரையில் அம்பேத்கரை ஒரு ஃபேபியன் சோசலிஸ்ட் வாதியாக வரையறை செய்கிறார். அது சரியான பார்வை ஆகும். ஆனால் அம்பேத்கரை ஒரு கம்யூனிஸ்டாக கற்பனை செய்து கொண்டு கம்யூனிஸ்டுகள் செய்ய வேண்டியதை அவர் செய்யவில்லை என்று எதிர்பார்ப்பது அவர் பிழை அன்று; அது நமது பிழையாகும்.

அம்பேத்கரியத்தைப் பின்பற்றும் இயக்கங்கள் அடுத்தக் கட்ட நகர்வுக்குச் செல்லாமல் தேங்கிக் கிடப்பதற்குக் காரணம் அவர்கள் புரட்சிகர கம்யூனிஸ்ட் அல்ல என்பதே ஆகும். ஆகவே அவர்களின் சாதி எதிர்ப்புப் போராட்டங்கள் ஒரு எதிர்வினையாக மட்டுமே அமைய முடியுமே தவிர ஒரு புரட்சிகர மாற்றத்தை நோக்கி இட்டுச்செல்ல இயலாது.

# 2000 ஆண்டுகளுக்கு முன்பே, எகிப்தில் தமிழ் வணிகர்கள்.

எகிப்து அரசர்களின் கல்லறையில் , கிருத்து பிறப்பதற்கு 1600 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் வணிகர் ஒருவர் தனது பெயரை எட்டு இடங்களில் பொறித்து வைத்துள்ள செய்தி வெளியாகி உள்ளது. அவரது பெயர் என்னவென்று யாருக்கும் தெரியாத நிலையில் தற்பொழுது சுவிட்சர்லாந்து ஆய்வாளர் பேராசிரியர் இன்கோ ஸ்ட்ராச் அதைக் கண்டு பிடித்துள்ளார்.

சிகை கோரன் என்பதற்கு சிகை என்றால் தலைமுடி அல்லது மகுடம் என்றும், கோரன் என்றால் (கொற்றவன்) தலைவன் என்றும் பொருள் என்பதாக அவர் கண்டறிந்துள்ளார். இதைப் போன்ற வேறு சில பெயர்களும் இந்தியாவிற்கும் மேற்கு உலகிற்கும் இடையே இருதரப்பு வணிகம் நிலவியதையும், தமிழ் வணிகர்கள் பழங்காலத்திலேயே அங்கு பயணம் மேற்கொண்டதையும் இந்த ஆய்வு உறுதிப் படுத்துகிறது. சுவிஸ் பேராசிரியரோடு ஆசிய ஆய்வுகளுக்கான பிரெஞ்சுப் பள்ளியைச் சார்ந்த மற்றோர் ஆய்வாளரான சார்லோட்டி அவர்களும் இணைந்து எகிப்திலிருந்த கல்வெட்டுகளை விளங்கிக் கொண்டு, சென்னையில் அண்மையில் நடைபெற்ற கல்வெட்டியல் மாநாட்டில் அது பற்றித் தெரிவித்து உள்ளனர்.

தமிழ் வணிகர்கள் கப்பலில் வந்து திரும்பியது மட்டுமல்லாமல், அவர்கள் எகிப்திலேயே நீண்ட நாள்கள் தங்கியும் உள்ளனர். மேலும் அங்கிருந்து தொலைதூரத்திலுள்ள பகுதிகளுக்கும் சென்றுள்ளனர்" என ஆய்வாளர் இன்கோ குறிப்பிடுகிறார்.

பிரெஞ்சு ஆய்வாளர் சார்லோட்டி அங்கிருந்த தமிழ் பிராமி (தமிழி) எழுத்துகளை விளங்கிக் கொள்வதற்கு உதவியுள்ளார். "சிகை கோரன் வரக் கண்ட" எனக் குறிப்பிடப் பட்டுள்ளது எனவும், இவ்வணிகர் கிரேக்கக் கல்வெட்டுகளைப் படித்தறிந்து அதனால் ஈர்க்கப் பட்டிருக்கலாம்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எகிப்திலிருக்கும் மற்றோர் கல்வெட்டில் கோபன், காடன் போன்ற தமிழ்ப் பெயர்கள், தமிழ் பிராமி எழுத்துகளில் பல இடங்களில் காணப்படுகின்றன. எகிப்தில் கண்டறியப்பட்ட 30 கல்வெட்டுகளில் 20 கல்வெட்டுகள் தமிழில் உள்ளன.

"தாலமி மற்றும் பிளினி ஆகியோரது எழுத்துகள் மூலம் ரோமானியர்கள் இந்தியாவுக்கு வணிகம் செய்ய வந்தனர் என நாம் அறிந்திருந்தாலும், அவ்வணிகம் ஒரு தரப்பிலா அல்லது இருதரப்பிலுமா என அறிய முடியவில்லை. ஆனால். இப்பொழுது கண்டறிந்த ஆய்வின் மூலம், ரோமானிய காலகட்டத்தில் இருதரப்பிலும் வணிகம் நடைபெற்றது என்பதற்கான சாட்சியம் கிடைத்துள்ளது" என மூத்த கல்வெட்டியல் அறிஞர் வி சுப்பராயலு குறிப்பிடுகிறார். தமிழ்நாடு மாநிலத் தொல்லியல் துறையின் ஆய்வறிஞரும் பேராசிரியருமான கே. இராசன் அவர்களும் இதை உறுதி செய்கிறார்.

நன்றி The Times of India 12/02/2026.

**ஆளுநர்களே தேவையில்லை..**

**பொதுக் கூட்டம்**

**தஞ்சாவூரில்..**

மார்ச்சு 7 காரி(சனி)க்கிழமை

**தமிழக மக்கள் முன்னணி**

9442979111, 9486524448

# திருப்பூர் பின்னலாடைத் தொழில்கள் மீண்டெழத் துணை நிற்போம்!

திருப்பூர் பின்னலாடைத் தொழில்கள் மீண்டெழத் துணை நிற்போம்! ஊடகவியலாளர்களுக்கான அறிக்கை:

அமெரிக்காவின் 50% வரி விதிப்பால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள திருப்பூர் பின்னலாடைத் தொழில்கள் குறித்து மேற்கொண்ட கள ஆய்வின் கூட்டறிக்கை பின்வருமாறு,

• அமெரிக்காவின் 50% வரி விதிப்பிற்குப் பின் திருப்பூரினுடைய தொழிலுற்பத்தி நிச்சயமற்ற நிலையை நோக்கி நகர்ந்திருப்பதை எங்கள் குழுவால் கண்டடைய முடிந்தது. நாங்கள் சந்தித்த, திருப்பூர் ஆடை உற்பத்தியில் ஈடுப்பட்டுள்ள பல்வேறு தரப்பு நபர்களும் இதை உறுதி செய்தனர்.

• அமெரிக்க அரசின் கூடுதல் வரி விதிப்பின் காரணமாக திருப்பூர் ஆடை ஏற்றுமதி நிறுவனங்கள் மாதம் ரூ. 2000 கோடி வரை இழப்பைச் சந்திக்க நேரிடும் என மதிப்பிடப்படுகிறது.

• அமெரிக்க ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி நின்று போனதன் உடனடி, நேரடி பாதிப்பைத் தொழிலாளர்களே எதிர்கொள்கின்றனர். திருப்பூரில் தொழிலாளர்களின் வேலையிழப்பு அதிகரித்து கொண்டேயிருக்கிறது.

• அமெரிக்க ஏற்றுமதியளவான 35- 40% உற்பத்தி தற்போது முடங்கியுள்ளதால், அதற்கான உற்பத்தியில் ஈடுபட்டு வந்த 35- 40% தொழிலாளர்களும் அதாவது 3.5 - 4 லட்சம் தொழிலாளர்களும் வேலையிழப்பைச் சந்திக்க நேரிடும் என்பது தெரிய வருகிறது.

• மேலும் எங்கள் கள ஆய்வில் கண்டடைந்த மிக முக்கியமான விடயமென்பது திருப்பூர் ஆடை உற்பத்தியில் ஈடுபடும் 10 லட்சம் அளவுள்ள தொழிலாளர்களில் ESI, நிதி பயனாளிகளாக 3.5..4 லட்சம் தொழிலாளர்கள் மட்டுமே அரசின் பதிவுகளில் உள்ளனர். முறைசாராத் தொழிலாளர்களாக இருக்கிற, குறிப்பாகப் புலம்பெயர்த் தொழிலாளர்கள் குறித்த துல்லியமான தகவல்கள் அரசிடமே இல்லை.

அரசின் பதிவுகளில் இல்லாத, முறைப்படுத்தப்படாத சற்றேக்குறைய 6 லட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்தால் கூட அரசின் தரவுகளின் அடிப்படையில், திருப்பூரில் வேலையிழப்பே இல்லை என்பது தான் ஆவணப்பதிவாக இருக்கும்.

• எனவே அரசு, திருப்பூர் ஆடை உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்கள் குறித்த முழுமையான தகவல்களை அரசின் ஆவணப் பதிவின் கீழ்க் கொண்டுவர வலியுறுத்துகிறோம். அவர்களுக்கு ESI, நிதி உரிமைகளை உத்திரவாதப்படுத்தி கொடுக்க வேண்டுகிறோம்.

• திருப்பூர் பின்னலாடைத் தொழில்கள் கடந்த 10 ஆண்டுகளாகவே பல்வேறு நெருக்கடிகளை தொடர்ந்து சந்தித்து வருகின்றனர். பணமதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி மற்றும் கொரோனா பேரிடர் போன்றவை பின்னலாடைத் தொழிலைக் கடுமையாகப் பாதித்துள்ளன.

• பின்னலாடை உற்பத்தி நிறுவனங்களுக்கும், தொழிலாளர்களுக்கும் அரசு ஆதரவாக இல்லாதது மட்டுமன்றி அதுவரை இத்தொழில்களுக்குக் கொடுத்து வந்த அரசின் பல்வேறு உதவிகளையும் நிறுத்தியுள்ளது. பருத்தி, நூல் போன்ற இத்தொழில்களுக்கான கச்சாப் பொருட்களுக்கு இறக்குமதியில் இருந்த வந்த சலுகைகளையும் நீக்கியுள்ளது.

• இதன் காரணமாக 2014- 15 ஆண்டு சமயத்தில் ரூ. 40,000 கோடி உற்பத்தியை எட்டிவிட்ட திருப்பூர் பின்னலாடை உற்பத்தி, பத்தாண்டுகள் கடந்து இன்றும் அந்த ரூ.40,000 கோடி உற்பத்தி மதிப்பைத்தான் எட்டிப் பிடித்திருக்கின்றன.

சிறு, குறு தொழில்களுக்கு எதிரான பொதுவான போக்குகள் மட்டுமன்றி, திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதியாளர்களுக்கு நேரிடையான பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பத்தாண்டுகளுக்கு முன்பு நடைமுறையில் இருந்த வரிப் பலன்கள், வரி விலக்குகள் உள்ளிட்டவைகளை ஒன்றிய அரசு நீக்கியுள்ளது.

மிகக் குறிப்பாக திருப்பூரிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஆடைகளுக்கு இறக்குமதி நாடுகள் விதிக்கும் வரிச்சுமையை ஏற்கும் விதமாக 15 வருடங்களுக்கு முன்பு வரை அரசால் 22.5% வரை ஊக்கத்தொகை (Drawback) கொடுக்கப்பட்டு வந்தது. அது படிப்படியாக குறைக்கப்பட்டு 2- 3% சதவீதஅளவில் மட்டுமே கொடுக்கப்படுகிறது.

• உள்நாட்டு- திருப்பூர் ஆடை உற்பத்திக்கு வழங்கி வந்த அரசின் ஆதரவு விலக்கப்பட்டது ஒருபுறமென்றால், மறுபுறம் அதுநாள் வரையிலும் பிறநாட்டு ஆடைகள் இறக்குமதிக்கு இருந்துவந்த கட்டுப்பாடுகளை நீக்கியது மோடி அரசு.

இந்திய சந்தையைப் பொறுத்தவரை வங்கதேச ஆடைகள் இந்தியச் சந்தையை ஆக்கிரமித்துள்ளன.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக் காலத்தில் இத்தகைய ஆடை இறக்குமதிக்கு 12% எதிர் மானிய வரி (Counter Vialing Duty) போடப்பட்டதால், இங்கு ஆடை இறக்குமதி செய்வது கட்டுப்படுத்தப்பட்டது. இப்போது அது முற்றிலுமாக நீக்கப்பட்டு, தங்கு தடையற்ற இறக்குமதி நடைபெறுகிறது. இதன் காரணமாக உள்ளூர் சந்தையில் திருப்பூர் உற்பத்தி ஆடைகளுக்கு இடமில்லாமல் போகிறது.

இந்த நிலையில் குற்றுயிரும், கொலையுயிருமாகப் போராடிக் கொண்டிருந்த திருப்பூர் பின்னலாடை உற்பத்தியின் நிலை தற்போது அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பால் முற்றிலுமாக கவலைக்கிடமாகியிருக்கிறது.

அமெரிக்கா அல்லாத பிற நாடுகளுக்கான ஏற்றுமதி விற்பனை மற்றும் உள்ளூர் சந்தை விற்பனை என்பவை, திருப்பூர் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு மாற்றுத் தீர்வாக கூறப்படுகிறது.

இதுபற்றி எங்கள் குழு உரையாடுகையில் உற்பத்தியாளர்கள் தரப்பானது,' திருப்பூரின் தற்போதைய உற்பத்தி செலவினங்களைக் கணக்கில் கொண்டால், ஏற்கனவே பிற நாட்டு ஆடை உற்பத்தியாளர்களால் கைப்பற்றப்பட்டுள்ள அமெரிக்கா அல்லாத சந்தையில், அவர்களோடு போட்டி போடுவது கடினம்' என்றனர்.

மேலும் 'உள்நாட்டு சந்தையைப் பொறுத்தவரை முன்னரே குறிப்பிட்டது போல வங்கதேச ஆடைகள் ஆக்கிரமித்துள்ளது மட்டுமல்லாது, இந்தியாவில் தற்போது நிலவும் பொருளாதார நிலையின் காரணமாக மக்களிடம் போதுமான வாங்கும் சக்தி இல்லை' என்பதையும் பதிவு செய்தனர்.

அமெரிக்கா அல்லாத சந்தைக்கான உற்பத்தி மற்றும் உள்நாட்டு சந்தைக்கான உற்பத்தி என்பவை நீண்டகால நோக்கில் திட்டமிடப்பட வேண்டியவை.

ஆனால் திருப்பூர் உடனடியாக மீண்டு வர, அமெரிக்க அரசுடனான அயலுறவு பேச்சுவார்த்தையே தீர்வாக அமையும் என்பதை எங்களிடத்திலே பதிவு செய்தனர்.

'இந்தியாவின் ரஷ்ய கச்சா எண்ணெய் இறக்குமதியே'அமெரிக்க அரசின் கூடுதல் வரி விதிப்பிற்கான முக்கிய காரணமாகக் குறிப்பிடப்படுகிறது.

அம்பானி போன்ற ஓரிரு குசராத்தி பனியா பெருமுதலாளிகளின் கொள்ளை இலாபத்திற்காகத் தீர்மானிக்கப்பட்ட இந்திய அரசின் அயலுறவுக் கொள்கையினால், தமிழ்நாட்டினுடைய திருப்பூரின் ஆயிரக்கணக்கான ஆடை உற்பத்தியாளர்கள் நட்டமடைந்திருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

பிரேசில், சீனா போன்ற நாடுகள் மீது அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பையொட்டி தொழில் உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும் பாதிப்பை அந்நாட்டு அரசுகள் தாங்கள் ஏற்றுகொள்வதாகக் கூறி தொழிலுற்பத்தியாளர்களை இழப்பிலிருந்து பாதுகாக்கின்றன.

அதுபோன்று இந்திய அரசும், தனது அம்பானி சார்பால் பாதிப்படைந்துள்ள திருப்பூர் தொழிலுற்பத்தியாளர்களுக்குரிய இழப்பீட்டை வழங்கி அவர்களைப் பாதுகாக்க வேண்டும்.

* பின்னலாடை உற்பத்திக்குத் தேவையான பருத்தி உள்ளிட்ட மூலப் பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும். குறிப்பாக பருத்தி இறக்குமதிக்கு நிரந்தர வரி விலக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

* திருப்பூர் பின்னலாடை உற்பத்தியாளர்களின் வங்கிக் கடனுக்குக் குறிப்பிட்ட காலம் தளர்வளிப்பதுடன், வட்டியில்லா புதிய கடன்களை வழங்கிட ஒன்றிய அரசு ஆவன செய்ய வேண்டும்.

* அமெரிக்காவிற்கான ஏற்றுமதி பிரச்சனை சீராகும் வரையிலும், திருப்பூர் பின்னலாடை உற்பத்திக்குத் தமிழ்நாடு அரசு மின்சாரக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டும்.

* திருப்பூர் பின்னலாடை உற்பத்தியில் ஈடுபட்டு வந்த தொழிலாளர்களுக்கு உரிய தொழிலாளர் உரிமைகளை உறுதி செய்வதுடன், இந்நெருக்கடி காலத்தைக் கடப்பதற்கு அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

ஒன்றிய அரசினுடைய தோல்வியடைந்த அயலுறவுக் கொள்கையே, திருப்பூர் எதிர் கொண்டிருக்கும் இன்றைய நெருக்கடிக்கான முழுமுதற் காரணமாக பார்க்கிறோம்.

இந்திய அயலுறவுக் கொள்கையும், தொழிற் கொள்கையும் பரந்துபட்ட பல் தேசிய இனங்களது நலனைப் பிரதிநிதித்துவப்படுத்தாது, குசராத்திய பனியா முதலாளிகளது முதலீட்டு நலனுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதாலேயே, அதனது அயலுறவு மற்றும் தொழிற் கொள்கையில் தமிழ்நாட்டின் 40,000 கோடி வர்த்தகம் பொருட்படுத்தப்படாமல் இருப்பதாகப் பார்க்கிறோம்.

இந்தியா, ஐந்து ட்ரில்லியன் டாலர் பொருளாதார உற்பத்தி இலக்கை நோக்கிப் பயணிக்க, தமிழ்நாடோ ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதார உற்பத்தி இலக்கை நோக்கி பயணிக்கிறது. ஒட்டுமொத்த இந்திய உற்பத்தி இலக்கில் ஐந்தில், ஒரு பங்கு; அதாவது ஒட்டுமொத்த இந்தியப் பொருளாதார உற்பத்தியில் 20 சதவீதம் பங்களிக்கக்கூடிய இடத்தை நோக்கி தமிழ்நாடு முன்னேறி வருகிறது.

தமிழ்நாட்டு முதல்வர் பல்வேறு நாடுகளுக்கும் சென்று அந்நிய முதலீட்டைத் தமிழ்நாட்டிற்குள் கொண்டுவரும் ஒப்பந்தங்கள் மேற்கொள்வதை பார்க்கிறோம். இவை ஒன்றிய அரசின் அயலுறவுத் துறை அமைச்சகத்திற்குட்பட்ட நேரடி வகையிலான பங்கேற்பாக இல்லையென்றாலும், அடிப்படையில் இந்திய அயலுறவுத் துறை அமைச்சகம் உலகநாடுகளுடன் வர்த்தக ரீதியாக மேற்கொள்கிற பேச்சுவார்த்தையை ஒத்ததாகவே தமிழ்நாட்டு அரசினுடைய ஒப்பந்த பேச்சுவார்த்தைகள் அமைகின்றன.

உலக நாடுகளுடனான வர்த்தக உறவின் பொருட்டு இந்திய அரசின் அயலுவுறக் கொள்கையில் பங்கெடுக்க வேண்டிய வரலாற்றுக் கட்டத்தை நோக்கி தமிழ்நாடு நகர்ந்திருப்பதையே இது காட்டுகிறது. தமிழ்நாடானது உலக நாடுகளுடனான வர்த்தகத்தில் தனது வகிபாகத்தை உறுதிப்படுத்த வேண்டிய கட்டத்தை நோக்கி வந்தடைந்துள்ளது.

தமிழ்நாடு அரசானது இந்திய அயலுறவுக் கொள்கையில் பங்கெடுக்கவில்லை என்றால் தற்போது திருப்பூர் பின்னலாடைத் தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள நிச்சயமற்றத் தன்மை, எதிர்காலத்தில் பிற தொழில்களுக்கும் ஏற்படக்கூடிய சூழலைத் தவிர்க்க முடியாமல் போகும்.

மேலும் இந்தோ- பசிபிக் கடற்பிராந்தியத்தின் மிக முக்கியமான புவிசார் அமைவிடத்திலுள்ள தமிழ்நாட்டின் துறைமுகங்கள் புவிசார் அரசியல் நோக்கிலும், இந்தியாவின் மிகப் பெரும் கிழக்குக் கடற்கரையோர எல்லை மாநிலம் என்றளவிலும் இந்திய அயலுறவுக் கொள்கையில் தமிழ்நாட்டின் பங்கேற்பு மிகவும் அவசியமாகும்.

கூட்டாட்சி அரசியல் உரிமை பேசுவோர்கூட ஒன்றிய அரசு கொண்டிருக்க வேண்டிய சில முக்கியத் துறைகளில் அயலுறவுத் துறையையும் குறிப்பிட்டே பேசுவர். ஆனால் இன்று தமிழ்நாடு அடைந்திருக்கும் தொழில் வளர்ச்சியானது, அயலுறவுக் கொள்கையிலும் தமிழ்நாடு அரசின் பங்கேற்பைக் கோருகிற இடத்திற்கு நம்மை அழைத்து வந்திருக்கிறது.

எனவே திருப்பூர் எதிர் கொண்டிருக்கும் இன்றைய தொழில் நெருக்கடி மட்டுமன்றி, தமிழ்நாடு எதிர்கொள்ள இருக்கும் பல்வேறு எதிர்கால நெருக்கடிகளையும் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசானது இந்திய வெளியுறவுக் கொள்கையில் பங்கேற்க வேண்டுமென்பதை எங்களது கூட்டறிக்கையின் வாயிலாக முன் வைக்கிறோம்.

அயலுறவுத் துறை அமைச்சகமானது மாநில அரசுகளை உறுப்புகளாகக் கொண்ட குழுவாக அமைக்கப்பட வேண்டுமென்பதைத் தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகள், சமூக இயக்கங்கள், அமைப்புகள் வலியுறுத்த வேண்டுமென்பதை இச்சமயத்திலே கேட்டுக்கொள்கிறோம்!

- அரசியல் கட்சிகள் மற்றும் சனநாயக இயக்கங்களின் கூட்டறிக்கை

கூட்டறிக்கை ஒருங்கிணைப்பு:
பெரியாரிய அம்பேத்கரிய மக்கள் இயக்கம்,
கூட்டாட்சியியல் நடுவம்- தமிழ்நாடு
புரட்சிகர இளைஞர் முன்னணி , மதுரை

## தமிழ்நாட்டுக் கலை விழா - ஓசூரில்

தமிழகப் பண்பாட்டு இயக்கம் சார்பாக ஏழாம் ஆண்டு தமிழ்நாட்டுக் கலை விழா ஓசூரில் 25.01.2026 அன்று மொழிப்போர் ஈகியர் நாளில் நடைபெற்றது. சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், தோழர் ஜீவா, மொழிஞாயிறு பாவாணர், தழல் ஈகி முத்துக்குமரன், தோழர் மோகன்ராசு, பேரா.வணங்காமுடி மற்றும் மொழிப்போர் ஈகியருக்கு வீரவணக்கம் செலுத்தி கலை விழா தொடங்கியது.

இந்நிகழ்வில் தப்பாட்டம் சிலம்பாட்டம் ஒயிலாட்டம் பெருஞ் சலங்கையாட்டம் பெரிய மேளம் உள்ளிட்ட கலைகள் மேடை ஏற்றப்பட்டது.
மேலும், தமிழ்த்தாய் விருது சூழலிகளுக்கான தமிழ் தாய் விருது தோழர் பாம்பன் அவர்களுக்கும் கல்வியாளருக்கான விருது பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும் ஊடகவியலாளருக்கான விருது தோழர் ஜீவசகாப்தன் அவர்களுக்கும் கலைத் தொண்டிற்கான விருது ஐயா முனுசாமி அவர்களுக்கும் வழங்கப்பட்டது.
கலைவிழாவின் நூல் அறிமுகமாக பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் எழுத்தடைவுகள் நூலும், தோழர். கலைவேலு எழுதிய இவர்தான் பெரியார் என்கிற நூலும் அறிமுகம் செய்யப்பட்டது.

கலை விழாவில் ஓசூர் மாநகர மேயர், சட்டமன்ற உறுப்பினர், நகர்மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் இயக்கங்களின் தலைவர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்

# எதையும்விட ஆளுநர் அமைப்பு முறையை ஒழிப்பதே இன்றைக்கு முதன்மையானது!

**ஆளுநர் அமைப்பு முறைகளை ஒழிக்காமல் மாநில உரிமைகளை எவரும் பேசிப் பயனில்லை..**

**இந்தியாவில் உள்ள மாநிலங்கள் அனைத்தும் ஆளுநர் அமைப்புமுறை எதிர்ப்பை முன்னெடுத்துப் போராடியாக வேண்டும்! மாநிலங்களின் உரிமைகளை வலியுறுத்துகிற இந்தியாவிற்குள் செயற்படும் இயக்கங்கள் கட்சிகள் எல்லாம் ஆளுநர் ஒழிப்புக்கான கூட்டமைப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும்!**

**ஆளுநர் அமைப்புமுறை எதிர்ப்புக் கூட்டமைப்பைப் பல மாநிலங்களில் உள்ள ஆளுநர் அமைப்பு முறை எதிர்ப்பாளர்களை ஒருங்கிணைத்து உருவாக்குகிற முயற்சியைத் தமிழக மக்கள் முன்னணி தொடங்கியுள்ளது.. அதற்கான ஆங்கில அறிக்கையே கீழே உள்ளது. பிற மொழிகளிலும் அறிக்கைகள் அணியமாகி வருகின்றன.. ஆளுநர் அமைப்பு முறை ஒழிப்பு முழக்கங்கள் ஓங்கி ஒலிக்கட்டும்!**

---

## Abolition of the Post of the Governor Continuous Sloganeering Struggle!

## Welcome Everyone To Team Together!

## Tamil Nadu People's Front

- The Governor is not elected by the people.
- The Governor always acts as a Gofer and an Overseer of the Union Government, and promotes the concepts of Aryas, Vedas, Shastras and Puranas.
- The Governors are not only ignorant of Tamil, but also the history of Tamil Nadu, as well as the socio-economic status, the literature, life style, culture, and the educational status of the State. They always try to control everything through their authority of office.
- They are adamant in appointing the Vice-Chancellors of their choice for all the Universities in Tamil Nadu.
- The present Governor R.N. Ravi is ingesting venomous concepts of the Vedas, Shastras and Sanatana, through his unwanted preachings in the universities of Tamil Nadu, and public platforms.
- The Governor of Tamil Nadu, who serves as the footrest of the RSS, vehemently degrades Thiruvalluvar and Vallalar, who are the secular personalities of Tamil Nadu and baskets them into the saffron concepts.
- R.N. Ravi of the RSS is also disgracing the rational leader of Tamilnadu Periyar E.V.R. and the Dravidian Ideologies.
- R.N. Ravi is indulging in mean activities like instigating the IAS and IPS officers against the well-being of the state, insisting that they should be loyal only to the Union Government and not to the State Government.
- He always tries to treat the elected State government as a mere launcher.
- He habitually indulges in sacking the proposals enacted in the State Assembly and tries to conceal the history of Tamil Nadu in order to impose the history of India and the Brahminism.
- He convenes a separate meeting for the Vice-Chancellors of TamilNadu Universities to groom them into his fold and control them accordingly.
- He tries incessantly to impose Hindi and Sanskrit in Tamil Nadu and treats the Government of TamilNadu as a servant of the Union Government.
- The atrocities of the Governors, like intentionally dissolving the State governments to contain them under the authority of the Union Government, are continuing illegally for 75 years after the independence of the nation.
- Whenever there is a stalemate in appointing someone as the Chief Minister of a state, the Governor tries to impose in that post a loyal person to the Union Government.
- The Governors usually create constitutional crisis through false accusations when a popular government is formed by people's mandate.
- The post of the Governor was created in the year 1652 by the British and it has been continuing so far as a neck breaking system crushing the rights of the people of various states.
- Raj Bhavan in Guindy, Chennai occupies 156.14 acres of land to serve as the office of the Governor. In the same way, there is another office functioning in an area of 86.72 acres in Udhagamandalam. The expenditure in maintaining them amounts to Rs. 8,23,50,00, (apart from the salary for the Governor amounting to Rs. 50 lakhs approximately) is met by the Government of Tamil Nadu from its State Exchequer every year. If we compound all these expenditures and divide it by 365 days, we shall find that Rs. 2,26,575 of the tax money of the people of Tamil Nadu is spent everyday.
- According to the norms of the constitution an amount of Rs. 7 lakhs and 50 thousand is allocated every year to renovate the furniture and other household utensils in the Raj Bhavan or buy new ones.
- Rs. 50 lakhs is assigned every year for the hospitality expenses to be incurred in the Raj Bhavan.
- Moreover, an amount of Rs. 15 lakh is the committed allocation for the Raj Bhavan's expenses on telephone, printing, and other office duties.
- The government of Tamil Nadu has to allot Rs. 10 lakhs every year for the renovation of the Raj Bhavan.
- The state government has to grant Rs. 20 lakhs every year to revamp the garden in the Raj Bhavan.
- The state government is committed to award Rs. 70 lakhs for the expenses on electricity alone.
- The records of the Raj Bhavan affirm that Rs. 70 lakhs are being allocated every year for the expenses of drinking water and water for other general needs.
- Rs. 1 crore has to be issued every year for the renovation of the buildings in the Raj Bhavan.
- Apart from all the above, it is indicated that Rs. 4 crores must be allocated for the Governor's eminence expenses every year.
- These kinds of wasteful expenditures of the Governor of TN surpasses all other states in India.
- We are raising our voice against having this kind of a Governor for nearly a century and have struggled against it also. However, the atrocities of the Governor have not come to an end.
- The political parties and movements like Congress and RSS raised their voice to abolish the system of appointing the Governors during the British Rule. But they themselves are indulging in atrocities joining with the Governors now.
- We may remember what the celebrated leader of Tamil Nadu C.N.Annadurai has said, "A goat does not need a beard, nor does a state need a governor."
- It's true. The states could not exercise their due rights because of the Governors. Hence in future, the system of appointing the Governors must be tottally abolished in all the states of India.
- The prime duty of the states is to fight for scraping the official system of the Governors, who are really sabotaging the progress of the states.

Hence,

All should come together to raise their unified voice to abolish the system of appointing Governors in the states.

- Let is join together. Our first and foremost duty is to fight against the appointment of the Governors in India. So all are cordially invited to venture this cause.

This is the clarion call of the TamilNadu Peoples' Front. ( TNPF)

# காரல் மார்க்ஸ் - உலகை அதிர வைத்த பெயர்.

● கண. குறிஞ்சி

சென்னையில் மார்க்ஸ் சிலை அமைக்கப்பட வேண்டும் என மார்க்ஸ் சிலை அமைப்புக்குழு, இரண்டு பொதுவுடைமைக் கட்சிகள், முற்போக்குச் சக்திகள் எனப் பலரும் தமிழக அரசிடம் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்தனர். அதை ஏற்றுக் கொண்ட தமிழக முதலமைச்சர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் 2025 ஏப்ரல் 2 அன்று சட்டப்பேரவை 110 விதியின் கீழ் காரல் மார்க்ஸ் சிலை சென்னையில் அமைக்கப்படும் எனச் சட்டமன்றத்தில் அறிவித்தார். அதைத் தொடர்ந்து, 2026 பிப்ரவரி 6 அன்று சென்னை கன்னிமாரா நூலக வாயிலில் மார்க்ஸ் சிலையைத் தமிழக முதலமைச்சரே திறந்து வைத்தார். முதலில் நந்தனம் கல்லூரி வளாகத்தில் திறக்கப்படுவதாக இருந்த திட்டம் மாற்றப்பட்டு, மிகப் பொருத்தமாக கன்னிமாரா நூலகம் மற்றும் எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

ஜெர்மனியில் மார்க்ஸ் பிறந்த ஊரான டிரையர் நகரில் உள்ள (இந்நகரில் மார்க்ஸ் 17 ஆண்டுகள் வாழ்ந்தார்) மார்க்ஸ் சிலையை எடுத்துக்காட்டாகக் கொண்டு, சென்னையிலுள்ள சிலை உருவாக்கப் பட்டுள்ளது. மார்க்சின் 200 - ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு 2018 மே 5- ஆம் நாளன்று இச்சிலை டிரையர் நகரில் திறக்கப்பட்டது. சீன மக்கள் குடியரசு இச்சிலையை நன்கொடையாக வழங்கியது. இச்சிலையைச் சீனச் சிற்பி வூ வைய்சன் (Wu Weishan) உருவாக்கினார். பீடத்துடன் சேர்ந்து 18 அடி உயரம் கொண்ட இச்சிலை 2.3 டன் எடை கொண்டிருந்தது. டிரையர், பெர்லின், பாரிசு, இலண்டன் ஹேம்பர்க் ஆகிய இடங்களோடு மார்க்ஸ் அதிகத் தொடர்பில் இருந்ததை நினைவு கூரும் வண்ணம் சிலையின் பீடம் ஐந்து முனைகளைக் கொண்டதாக அங்கு அமைந்துள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை மார்க்ஸ் சிலை, மேற்கு வங்கம், கேரளம் போன்ற மாநிலங்களில் நிறுவப்பட்டுள்ளது. இருப்பினும், தமிழ்நாட்டில் மிக எழுச்சியுடன் நிறுவப்பட்ட மார்க்ஸ் சிலை, அவற்றை விடச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதே அனைவரின் கருத்தாகவும் உள்ளது.

சென்னைச் சிலையைச் செதுக்கியவர் சிற்பி என். எஸ். கார்த்திகேயன் ஆவார். சென்னைக்கு அருகே மலையம்பாக்கம் கிராமத்தைச் சார்ந்த அவர் இதுவரை ஏறக்குறைய 44 ஆயிரம் சிலைகளை வடிவமைத்திருக்கிறார். "எனது 34 ஆண்டுக் கால அனுபவத்தில் முழு சுதந்திரத்துடனும், மன நிறைவுடனும், ஈடுபாட்டுடனும் செய்த சிலை என்றால், அது காரல் மார்க்ஸ் சிலைதான் " என்கிறார் அவர். "மார்க்சின் மனைவி குழந்தைக்குப் பால் கொடுக்கும் போது இரத்தம் வந்தது என்று படித்த போது என் கண்கள் குளமாகி விட்டன" எனக் கூறும் சிற்பி கார்த்திகேயன், "நம்மால் ஒரு வீட்டில் உள்ளவர்களையே மாற்ற முடியவில்லை. ஆனால் காரல் மார்க்ஸ் எத்தனை நாடுகளில் புரட்சியை ஏற்படுத்தினார். உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு எத்தகைய வழிகாட்டினார் என்பதை நினைக்கும் போது அவர் சாதாரணமானவர் அல்ல என்பதை உணர்ந்து கொண்டேன். எனவே முழுமனதுடனும், கவனத்துடனும் மக்களுக்காகவே வாழ்ந்த போராளியின் சிலையை வடிவமைத்தேன் " என நெகிழ்ச்சியுடன் தனது நேர்காணலில் குறிப்பிட்டார்.

வழவழப்பான (Smooth) பினிசிங் இல்லாமல், இம்பாஸ்டோ (Impasto) நுட்பத்தைப் பயன்படுத்தி, களிமண்ணில் வேலை செய்து, தழும்புகள் அப்படியே வெண்கலத்தில் வார்க்கப்பட்டது. இத்தகைய சிலை தனது நீண்ட நாள் கனவு எனக் கூறும் அவர், "உயிரோட்டமான மார்க்ஸ் சிலையை அமைத்ததிலிருந்து எனக்குள்ளும் என்னை அறியாமல் மார்க்ஸ் கொள்கைகள் என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டன" எனத் தனது உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்.

தமிழகத்தைப் போலவே, இரசியா, சீனா, இங்கிலாந்து, வெனிசூலா, உக்ரைன், செக் குடியரசு, பல்கேரியா, இத்தாலி, ஸ்பைன், ஹங்கேரி, துருக்கி, எத்தியோப்பியா, லித்துவேனியா, பெலாரஸ் என உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் மார்க்ஸ் சிலை பரவலாக அமைந்துள்ளது.

இப்படி உலகெங்கும் உள்ள மக்கள் மார்க்ஸைக் கொண்டாடும் பொழுது, தமிழ்நாட்டில் பாரதீய சனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான தமிழிசை சௌந்தர்ராசன் அவர்கள் "மார்க்சுக்கும் தமிழ்நாட்டுக்கும் என்ன தொடர்பு? அவர் எப்பொழுதாவது இங்கு வந்துள்ளாரா?" எனக் கேள்வி எழுப்புகிறார். இது சங்கிகளுக்குண்டான அறியாமையின் வெளிப்பாடுதானே அன்றி, வேறல்ல!

1999 ஆம் ஆண்டு பிபிசி செய்தி நிறுவனம் கடந்த 1000 ஆண்டுகளில் அதாவது கடந்த பத்து நூற்றாண்டுகளில் தலைசிறந்த சிந்தனையாளர் யார் என்று நடத்திய கருத்துக் கணிப்பில் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனை இரண்டாம் இடத்திற்குத் தள்ளிவிட்டு முதல் இடத்தைக் கார்ல் மார்க்ஸ் பெற்றார் என எழுதியது குறிப்பிடத்தக்கது. இத்தகைய அரிய செய்திகளை அறியாதவர்கள் மார்க்ஸ் எனும் சூரியன் மீது சேற்றை வாரி இறைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், உண்மையின் மறுபக்கம் தெளிவானது.

கார்ல் மார்க்ஸ் பத்திரிகைக் கட்டுரைகளில் மட்டுமல்ல, வரலாற்றுக் குறிப்புகளிலும்கூட இந்தியாவைப் பற்றிப் பற்பல செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். இந்தியா குறித்து மார்க்ஸ் எழுதிய குறிப்புகள், ஒரு நூலாகத் தொகுக்கப்பட்டு ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. அது தமிழிலும் வெளிவந்து பல காலமாகி விட்டது.

1853 முதல் 1858 வரை "நியூயார்க் டெய்லி டிரிபியூன் " எனும் பத்திரிகையில் இந்தியா குறித்துக் காரல் மார்க்ஸ் 33 கட்டுரைகள் எழுதியுள்ளார். இதில் முகலாயர் ஆட்சி குறித்தும் கிழக்கிந்தியக் கம்பெனியின் சுரண்டல் குறித்தும் சிப்பாய்க் கலவரம் குறித்தும் அவற்றில் எழுதியுள்ளார். கடலூர்க் கோட்டையைக் கைப்பற்றுவதற்காகப் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையே நடைபெற்ற போர் குறித்து விரிவாக எழுதியுள்ளார். தமிழகத்தின் பாண்டிய மன்னன் மற்றும் சேர மன்னன் குறித்தும் பதிவு செய்துள்ளார். தெக்காணப் பகுதியில் தமிழ், கன்னடம், தெலுங்கு, மராத்தி, ஒரியா ஆகிய ஐந்து மொழிகள் பேசப்பட்டதாக மார்க்ஸ் குறிப்பிடுகிறார். பிரித்தானிய அரசின் சித்திரவதை ஆணையத்தின் பரிந்துரைகள் குறித்து மார்க்சு எழுதிய குறிப்பில், தமிழகத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி பற்றி விவரித்துள்ளார். மயிலாடுதுறையில் உள்ள விவசாயிகள் வரி கொடுக்காத காரணத்திற்காகச் சித்திரவதை செய்யப்பட்டதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதை மார்க்ஸ் சுட்டிக் காட்டிப் பிரித்தானிய வல்லரசின் கோர முகத்தை அம்பலப்படுத்தியுள்ளார். தவிரவும். தாமஸ் மன்றோ அறிமுகப்படுத்திய இரயத்துவாரி முறையின் செயல்பாடு பற்றியும் மார்க்ஸ் ஆய்வு செய்துள்ளார்.

இப்படி 170 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவின் மீதும், தமிழ்நாட்டின் மீதும் மிகுந்த கரிசனம் காட்டிய காரல் மார்க்சின் பொருத்தப்பாடு குறித்துக் கேள்வி எழுப்பச் சங்கிகளுக்கு எவ்வகைத் தகுதியும் இல்லை.

மேலும் மார்க்ஸ் தமிழ்நாட்டிலுள்ளவர்களால் மட்டுமல்ல, மனிதகுலம் முழுமையுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களால் போற்றிக் கொண்டாடப்படுகிறார். "கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பொதுவுடைமை அரசாங்கங்கள் வீழ்ச்சி அடைந்தவுடன், மார்க்சின் கதை இதோடு முடிந்துவிட்டது. அவர் செத்துவிட்டார் இலண்டன் .கல்லறையில் எஞ்சியிருக்கும் அவரது உடலின் எச்சங்கள், பெர்லின் சுவரின் இடிபாடுகளுக்குக் கீழ் நிரந்தரமாகப் புதைக்கப்பட்டுவிட்டன. யாரும் அவரைப் பற்றிச் சிந்திக்கத் தேவையில்லை. அவரது சிந்தனைகளை இனி படிக்கவே வேண்டாம்" எனச் சிலர் பரப்புரை செய்தனர். ஆனால் முதலாளித்துவ சமூக உற்பத்தி முறை குறித்து மார்க்ஸ் பகுப்பாய்வு செய்து சொன்னது இன்றைய முதலாளித்துவ நெருக்கடிகளைப் புரிந்து கொள்ள எங்களுக்கு உதவியாக உள்ளது என முதலாளித்துவவாதிகளே மார்க்ஸ் பற்றிப் பாராட்டுக் கட்டுரை எழுதுகிறார்கள்.

தனது கோட்பாட்டிற்காக ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம் என ஒவ்வொரு நாட்டிலிருந்தும் மார்க்ஸ் நாடு கடத்தப்பட்டு, இறுதியில் நாடற்றவராக இங்கிலாந்தில் அவர் மறைந்தார்.

கார்ல் மார்க்ஸ் காலமானதை முன்னிட்டு 1883 மார்ச்சு 17 அன்று இலண்டன் ஹைகேட் இடுகாட்டில் மார்க்சின் இணைபிரியாத் தோழர் பிரடரிக் ஏங்கெல்ஸ் ஆற்றிய உரை, மார்க்சின் ஒப்பற்ற பங்களிப்புக் குறித்து விரிவாகப் பேசுகிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த இரங்கல்

உரையின் சில தெறிப்புகள்: .

" மார்ச்சு 14ஆம் நாளன்று (1883) பிற்பகல் இரண்டே முக்கால் மணிக்கு நம்முடன் வாழ்ந்த மாபெரும் சிந்தனையாளர் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார்.

நாங்கள் மார்க்சைப் பார்க்கத் திரும்பி வந்த பொழுது, அவர் தன்னுடைய சாய்வு நாற்காலியில் அமைதியாக ஆனால் நிரந்தரமாக உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டோம். அந்த மேதையின் மரணம், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் போர்க்குணம் மிக்க பாட்டாளி வர்க்கத்திற்கும், வரலாற்று அறிவியலுக்கும் அளவிட முடியாத இழப்பை ஏற்படுத்தியிருக்கிறது இம்மகத்தான மனிதருடைய பிரிவினால் ஏற்பட்டிருக்கின்ற இடைவெளியை நாம் விரைவில் உணர்வோம்.

இயற்கையின் வளர்ச்சி விதியை டார்வின் கண்டுபிடித்தது போல, மனித சமூக வரலாற்றின் வளர்ச்சியை மார்க்ஸ் கண்டுபிடித்தார்............ மார்க்ஸ் இன்றைய முதலாளிய உற்பத்தி முறை மற்றும் அந்த உற்பத்தி முறை தோற்றுவித்துள்ள முதலாளியச் சமூகத்தினுடைய இயக்கத்தின் குறிப்பான விதியையும் கண்டுபிடித்தார். அவர் உபரி மதிப்பைக் கண்டுபிடித்தது திடீரென்று அந்த பிரச்சனையின் மீது ஒளியைப் பாய்ச்சியது. அப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முதலாளி வர்க்கப் பொருளியலாளர்கள், சோசலிச விமர்சகர்கள் ஆகிய இருதரப்பினரும் இதற்கு முன்பு செய்த எல்லா ஆராய்ச்சிகளும் இருட்டிலே திண்டாடிக் கொண்டிருந்தன.

ஒரு முழு வாழ்க்கைக் காலத்துக்கு அத்தகைய இரண்டு கண்டுபிடிப்புகளே போதும். அவற்றில் ஒரு கண்டுபிடிப்பைச் செய்ய முடிந்தால்கூட, அந்த மனிதர் மிகுந்த நல்வாய்ப்பைப் பெற்றவர் ஆவார். ஆனால் தன்னுடைய ஆராய்ச்சியின் ஒவ்வொரு துறையிலும், மார்க்ஸ் பல துறைகளை ஆராய்ந்தார். ஒரு துறையில் கூட மேம்போக்கான ஆராய்ச்சியை அவர் மேற்கொள்ளவில்லை - கணிதத்தில்கூடத் தனித்துவமான கண்டுபிடிப்புகளைச் செய்தார். அத்தகைய அறிவியல் மனிதர் அவர். ஆனால் இது அவருடைய சாதனைகளில் அரை பங்கு கூட இல்லை.

மார்க்ஸ் அறிவியலை இயங்காற்றல் உடைய புரட்சிகரமான சக்தியாகக் கண்டார் ........... மார்க்ஸ் முதலில் ஒரு புரட்சிக்காரர். ஏதாவது ஒரு வழியில் முதலாளியச் சமூகத்தை மற்றும் அது உருவாக்கி இருக்கின்ற அரசு நிறுவனங்களை ஒழிப்பதற்கு, நவீனப் பாட்டாளி வர்க்கத்தின் தேவையை உணரும்படி செய்த முதல் நபர் அவரே.

விடுதலைக்குப் பங்களிப்பது அவருடைய மெய்யான வாழ்க்கைப் பணியாகும். போராட்டமே அவருக்கு உயிர். அவரைப் போல் எப்பொழுதும் உணர்ச்சிகரமாக, உறுதியாக, வெற்றிகரமாகப் போராடுவதற்கு எவராலும் முடியாது ......... (பலவேறு) இதழ்களிலும், போர்க்குணம் மிக்க வெளியீடுகளிலும், பாரீசு, பிரசல்ஸ், மற்றும் இலண்டன் நிறுவனங்களிலும் அவருடைய பணி தொடர்ந்தது. இறுதியாக, எல்லாவற்றிற்கும் சிகரமாக, சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தை அவர் நிறுவினார். வேறு ஒன்றையும் செய்யாது இருந்தால் கூட, இந்தச் சாதனையைப் பற்றி மட்டுமே உறுதியாக அவர் பெருமை அடைய முடியும்.

மார்க்ஸ் தம் காலத்தில் அதிகமாக வெறுக்கப்பட்ட, மிகவும் அவதூறு செய்யப்பட்ட மனிதராக இருந்தார். சர்வாதிகார அரசாங்கங்கள், குடியாட்சி அரசாங்கங்கள் ஆகிய இரண்டுமே அவரைத் தம்முடைய நாடுகளிலிருந்து வெளியேற்றின. முதலாளி வர்க்கத்தினர் - அவர்கள் பழமைவாதிகளோ அல்லது அதிதீவிர சனநாயகவாதிகளோ - மார்க்ஸ் மீது அவதூறுகளைக் குவிப்பதில் ஒருவருக்கொருவர் போட்டியிட்டனர். இவை அனைத்தையும் அவர் ஒட்டடையைப் போல ஒதுக்கித் தள்ளினார். அவற்றைப் புறக்கணித்தார். இன்றியமையாத தேவை ஏற்பட்டால் மட்டுமே அவற்றுக்குப் பதில் அளித்தார்.

சைபீரியாவின் சுரங்கங்களிலிருந்து கலிபோர்னியா வரை, ஐரோப்பா மற்றும் அமெரிக்கக் கண்டங்களின் எல்லா பகுதிகளிலும் இலட்சக்கணக்கான புரட்சிகரத் தொழிலாளர்களின் அன்புக்கும், மரியாதைக்கும் உரியவராக, அவர் மரணம் அடைந்த பொழுது அவர்கள் கண்ணீர் சொரிந்தனர். அவருக்குப் பல எதிரிகள் இருந்திருக்கலாம். ஆனால் அனேகமாக ஒரு தனிப்பட்ட பகைவர் கூட இல்லை என்று நான் துணிந்து கூறுவேன்" எனும் ஏங்கெல்சின் உரை காலத்தால் அழியாத கல்வெட்டாகும்.

இயங்கியல் பொருள்முதல் வாதம், வரலாற்றுப் பொருள்முதல் வாதம், உபரி மதிப்புக் கோட்பாடு, வர்க்கப் போராட்டம் போன்ற அவரது கோட்பாடுகள் இன்றும் பொருத்தப்பாடு மிக்கவையாக உள்ளன.

"ஒரு தத்துவம், மக்களைக் கவ்விப் பிடித்தால், அது ஒரு பௌதீக சக்தியாக மாறிவிடும் " எனும் மார்க்சின் வைரவரிகளுக்கு அவரது தத்துவமே மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இரசியா, சீனா, வியட்நாம், கியூபா, இலத்தீன் அமெரிக்க நாடுகள் என அவரது தத்துவ வெளிச்சத்தில் பல்வேறு நாடுகள் விடுதலை பெற்றன. தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டத்திற்கு அவரது தத்துவம் ஆயுதமாகத் திகழ்கிறது.

"தத்துவம் இல்லாத நடைமுறை, குருடு, நடைமுறை இல்லாத தத்துவம், நொண்டி" எனும் அவரது வழிகாட்டுதல், எந்த ஒரு இசத்திற்கும் பொருந்தக் கூடியதாகும்.

"புத்தகங்களை விழுங்குவதற்காகப் படைக்கப்பட்ட இயந்திரம் நான்" எனத் தன்னைப் பற்றி மார்க்ஸ் குறிப்பிடுவது வழக்கம். அதைப்போல பிரித்தானிய நூலகத்தில் பல ஆண்டுகள் நாள்தோறும் 12 மணி நேரம் செலவழித்து அவர் அரிதின் முயன்று சேகரித்த அறிவு, இன்று மானுட விடுதலைக்கான சாவியாகத் திகழ்கிறது.

இலண்டனில் அவர் வாழ்ந்த பொழுது பணநெருக்கடியால் உடைகளைக் கூட அடமானம் வைத்திருந்ததால், வாட்டும் கடும்குளிரில் வெளியே செல்ல முடியாமல் வீட்டிற்குள்ளேயே பல நாள்கள் முடங்கிக் கிடந்தார். இத்தனைத் துன்பங்கள், அதிகார அடக்குமுறை வாட்டினாலும், சமரசமற்று ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அவர் ஆற்றிய சேவை ஒப்புயர்வற்றது.

"மக்களுக்காக உழைப்பதே மகத்தான செயல் என்பதை மார்க்ஸ் மனதில் தைக்கும் வண்ணம் வலியுறுத்தி வந்தார். "மனித குலத்தின் பெரும்பான்மைக்காகப் பாடுபடக்கூடிய ஒரு வேலையைச் செய்வது என நாம் தீர்மானித்துக் கொண்டால், எவ்வளவு பெரிய சுமைகளும் நம்மைச் சோர்வடையச் செய்து விடாது. காரணம், அவையெல்லாம் அனைவருக்குமான தியாகங்கள் ஆகும். நமக்குக் கிடைக்கப் போகும் மகிழ்ச்சியோ எல்லையற்றது. நமது மகிழ்ச்சி கோடான கோடி மக்களுக்குச் சொந்தமானது. நமது சாதனைகள் நீடித்து நிற்கும். எப்பொழுதும் அவை தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும். உன்னதமான மனிதர்கள் வடிக்கும் சூடான கண்ணீரால் நமது சாம்பல் கழுவப்படும். " என்ற மார்க்சின் வைரவரிகள் என்றும் நமக்கு உந்துசக்தியாகத் திகழும்.

எனவே நாம் ஓய்வெடுக்கவோ, சோர்வடையவோ நேரமில்லை. கம்யூனிசபூதம் ஒழிந்தது என ஆதிக்கச் சக்திகள் கொண்டாடும் பொழுதெல்லாம், அவர்கள் நடுநடுங்கும்படி தன்னைப் புதுப்பித்துக் கொண்டு மார்க்சியம் வெல்லற்கரிய சக்தியாக மீண்டும் மீண்டும் கிளர்ந்தெழுகிறது.

நெருக்கடிகளால் ஏற்படும் விளைவுகளுடன் போராடாமல், அந்த விளைவுகளுக்கான காரணத்தைப் போராடி அழிக்க வேண்டும். என மார்க்சியம் நமக்குக் கற்றுத் தருகிறது. நமது முயற்சிகளில் பின்னடைவுகள் நேரும் பொழுதெல்லாம், சாம்பலிலிருந்து பீறிட்டெழும் பீனிக்ஸ் பறவை போல, நமக்கு உத்வேகம் தருவது, மார்க்சியமே!

"சக்திக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம் " எனும் சோசலிசக் கட்டுமானத்தைக் கடந்து, "சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்" எனும் உன்னதமான கம்யூனிச அறத்தை மார்க்ஸ் நமக்குக் கற்பித்தார்.

"உலக நாடுகளிலுள்ள உழைக்கும் மக்களே, ஒன்றுபடுங்கள்! நீங்கள் இழக்கப் போவது, அடிமைச் சங்கிலிகளைத் தவிர, வேறு எதுவுமில்லை. ஆனால் பெறப்போவதோ ஒரு பொன்னுலகம்" என மார்க்ஸ் நமது காதோடு என்றும் சொல்லிக் கொண்டே இருப்பார். தோழமையோடு நம்மை வழிநடத்துவார்.

புரட்சியின் பேருருவாக மார்க்ஸ் காலத்தை வென்று நிற்பார். அப்பொழுது சங்கிகளுக்கும், சனாதனிகளுக்கும் மார்க்சின் பொருத்தப்பாட்டை வரலாறு உணர்த்தும்.

# பிறப்பால் தமிழர்களா, தமிழர்கள் இல்லையா என்பது மிகவும் இழிவான மதிப்பீடு..

தமிழர்களின் பழம் பெரும் சிறப்புகளை வெளிக்கொண்டு வந்து நிறுவியவர்கள் பலர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அல்லர்..

திராவிடர்கள் வரலாற்றை மண் போட்டு மூடி இருப்பார்கள்.. என்று கற்பனையில் கூறுகிறவர்கள் தமிழ் வரலாற்றுச் சிறப்புகளை எல்லாம் மூடிய வையாபுரியையும், தெ. பொ. மீ. யையும் என்னவாறு மதிப்பிடுகிறார்?

ஒருவரை.. அவர் பிறப்பால் தெலுங்கர்.. இவர் பிறப்பால் கன்னடர்.. அவர்கள் பிறப்பால் தமிழர்கள் இல்லை..- இப்படியாக அடையாளப்படுத்துவதுதான் தமிழ்த் தேசியம் என்று இன்றைக்குக் கருத்துரைக்கின்றனர் சிலர்.

பிறப்பால் தமிழர்கள் இந்தியத்திற்கு அடிமைப்பட்டுக் கிடப்பதைப் பற்றியோ, ஆரியப் பார்ப்பனியத்திடம் தங்கள் மொழியும் பண்பாடும் வரலாறும் அரசியலும் நசுக்குண்டு கிடப்பதைப் பற்றியோ, இந்திய மார்வாடி பெருமுதலைகளிடமும், பன்னாட்டுப் பெரு முதலாளிகளிடமும் தமிழ்நாட்டின் பொருளியல் வீழ்த்தப்பட்டுக் கிடப்பதைப் பற்றியோ அவர்களுக்குக் கவலை இல்லை..

அவற்றை மீட்பதற்குரிய அரசியலையும் விடுவிப்பதற்குரிய போராட்ட அறிவையும் செயற்பாடுகளையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை..

தமிழர்களாகப் பிறந்த பெரும்பாலான அறிஞர்கள், தலைவர்கள் மேற்சொல்லப்பட்ட மூன்று நிலையினரிடமும் முடங்கி அடிமைப்பட்டுக் கிடக்கின்றனர்..

அத்தகைய அடிமையர்களைத் தமிழர்கள் என்று பெருமை அடைகிறவர்கள், தமிழ்நாட்டின் உரிமைகளுக்குக் குரல் கொடுத்த, போராடிய, தம்மை ஈகப்படுத்திக் கொண்ட தலைவர்கள் பலரின் குருதியாய்வு செய்து, அவர்கள் தமிழர்கள் இல்லை தெலுங்கர்கள் கன்னடர்கள் என்பதாகக் குழப்பி வருகின்றனர்..

ஒரு தேசிய இன விடுதலைக்காக, ஒருவர் அந்த இனத்தின் விடுதலையில் அக்கறை கொண்டிருக்கிறார்களா? தங்களை அதற்கென ஒப்புவித்துக் கொண்டு ஈகப்படுத்திக் கொள்ளுகிற உணர்ச்சியோடு இருக்கிறார்களா? - என்பதுதான் வரையறையே அன்றி அவர்கள் பிறப்பால் யார் என்று கிளறிக் கொண்டிருப்பது வரையறை இல்லை..

பிறப்பால் ஒருவரை அடையாளம் காணுகிற உணர்வே முதலில் தமிழ்ப் பண்பாட்டுக்குரியது இல்லை.. அத்தகைய உணர்வு ஆரியப் பார்ப்பனியத்தின் வருணாச்சிரம வெறித்தனம் பயிற்றுவித்த உணர்வு.. அந்த உணர்வைத் தங்களின் மண்டைக்குள் ஏற்றிக்கொண்டு தமிழ்த் தேசிய அரசியலைக் குளறுபடி செய்து கொண்டிருக்கிற ஆரியப் பார்ப்பனிய அடிமை கருத்தியலாளர்களைத் தமிழ்த் தேச அரசியல் களத்தில் இருந்து விலக்கியாக வேண்டும்..

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பொதுமை அறம் சார்ந்த உணர்வை உலகுக்குப் பரப்பிய பேரறிவு கொண்ட தமிழ்ப் பேரினத்தில் சாதி என்னும் மலத்தைக் கிளறிக் கொண்டிருக்கிற உணர்வுதான் ஒருவரைப் பிறப்பால் அடையாளப்படுத்துகிற உணர்வு..

எவர் ஒருவரும் கருத்தால், நடைமுறையால், வாழ்முறையால், செயற்பாடுகளால் யாருக்கானவராக இருக்கிறார் என்பதிலிருந்தே அவரை அடையாளம் காண முடியும்..

கியூப விடுதலைக்காகப் போராடிய சேகுவேராவை கியூபியர்கள் எவரும் குருதி ஆய்வு செய்து அவரைப் புறக்கணிக்கவில்லை.

தமிழ் மொழிக்காகவும் இன உரிமைகளுக்காகவும் தமிழ்நாட்டு விடுதலை நோக்கத்திற்காகவும் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட, ஈகப்படுத்திக் கொண்ட எண்ணற்ற பலரின் வீட்டு மொழி தமிழியத் தொடர்புடைய மொழியாகவே இருந்திருக்கிறது என்பதையும், பலர் வெளிநாட்டினராகக்கூட இருந்திருக்கின்றனர் என்பதையும் அறிய வேண்டும்.

விடுதலை உரிமைப் போராட்ட அரசியல் என்பது ஒருவரின் கொள்கையிலிருந்தும் செயல்களிலிருந்தும் மதிப்பிடப்படுவதேயன்றி, எவர் ஒருவரின் குருதியையும் மலத்தையும் ஆய்வு செய்து கொண்டிருப்பதில்லை..

கருத்துகளிலிருந்து, செயல்களில் இருந்து ஒருவரை மதிப்பிடுகிற பொழுது அவர் தமிழுக்கு, தமிழ் இனத்திற்கு, தமிழ்நாட்டிற்கு உரியவராக உள்ளாரா இல்லையா என்பதை வெளிப்படையாக அறிய முடியும்.. அப்படியே இல்லாதவர் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவரே ஆனாலும் அவரைத் தமிழர் என்று சொல்லிக் கொள்வதில் எத்தகைய தேவையோ சிறப்போ இருப்பதில்லை..

கீழடியின் சிறப்புகளை, அதன் பழமை இருப்புகளை ஆய்வுப்படுத்தி, நிறுவி வெளிப்படுத்தியவருக்குத் தாய்மொழி தமிழ் இல்லை.. இந்திய அரசு அவரைத் தூக்கிப் பந்தாடிய பொழுதுகூட அதன் வழி இன்னல்களை அவர் அடைந்தபோது கூட, அவர் தாம் கண்டறிந்த உண்மையிலிருந்து மாற்றிச் சொல்லிவிடவில்லை..

அதேபோல், கீழடியில் இரும்பு உருக்கு நிலைகள் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே கண்டறியப்பட்டது எனும் உலகின் பெரும் சிறப்பை இந்திய அரசு ஏற்காத சூழலில் கூட, அதை வலிமையாக நிறுத்திக் காட்டி, நிலைப்படுத்தி, காட்சிப்படுத்திப் பரப்பிக் கொண்டிருக்கிறது தமிழ்நாட்டு அரசு..

அதேபோது கீழடியின் பழஞ்சிறப்பை ஏற்காத இந்திய அரசைக் கண்டிக்காமல், அதை எதிர்த்துப் போராடாமல், அதை வெளிப்படுத்திய தமிழ்நாடு அரசு திராவிடத்தின் பெயரைத் தாங்கி இருக்கிறது என்றும், அவர்கள் தமிழர்கள் அல்லர் என்பதாகவும் இழிவுபடுத்துகிறவர்களைத் தமிழ்த்தேசியர் என்பது வெட்கப்படக் கூடியது..

தமிழை, தமிழர்களின் பழமைச் சிறப்புகளை ஆய்ந்து உலக அளவில் வெளிக்காட்டிய வெளிநாட்டு அறிஞர் பெருமக்களை அவர்கள் தமிழர்கள் இல்லை என்று இழிவுபடுத்துவதுதான் தமிழ்த்தேசியமா?

தமிழ்த்தாய் மொழியினராய்ப் பிறந்து தமிழை, தமிழ் இனத்தை, தமிழ்நாட்டை மீட்கிற உணர்வை, போராடுகிற உணர்வை மேற்கொள்ளாமல் அடிமைப்பட்டிருந்த விபீடன, பிரகலாத வரிசையில் வையாபுரியார், தெபொமீ, ம.பொ.சி, மூப்பனார், பொள்ளாச்சி மகாலிங்கம் உள்ளிட்டோரின் பட்டியலில் இருக்கிற தமிழர்களிடம் என்ன பெருமை நமக்கு இருக்கிறது?..

அக, பிறப்பால் தமிழர்களா, பிறப்பால் தமிழர்கள் இல்லையா என்பது மிகவும் இழிவான மதிப்பீடு என்பதை மன்னர்களின் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.. - பொழிலன்

**தமிழ்நாடு இதழுக்காக அண்மையில் நன்கொடை வழங்கியவர்கள்**

| | |
|---|---|
| திரு. தென்முகநம்பி, சென்னை | 1000 |
| தோழர் செங்குட்டுவன், ஆவடி | 500 |
| திரு. பிச்சைவள்ளிநாயகம் | 500 |
| முனைவர் முத்தமிழ், தஞ்சை | 500 |
| திரு. இரா. கழராம்பன், திண்டுக்கல் | 3000 |

நூல் அஞ்சல்

பெறுநர்:

விடுநர்:
தமிழ்நாடு, 4/197, பல்லவன் நகர், 3 ஆவது தெரு,
மேடவாக்கம், சென்னை 600100 கைபேசி 97108 75283,

வெளியீட்டுக் குழு : பொழிலன், பேரா. த. செயராமன், முத்தமிழ், கண. குறிஞ்சி, நிலவழகன், பாவெல்
தமிழ்நாடு (மாத இதழ்) 4/197 பல்லவன் நகர், 3 ஆவது தெரு, மேடவாக்கம், சென்னை 600100 கைப்பேசி 97108 75283, 91713 78874
(கீற்று இணையதளத்திலும் பார்க்கலாம்) மின்னஞ்சல் : thamizhnadu2051@gmail.com
அச்சிட்டோர் : மூகாம்பிகை அச்சகம், 24, வாணிபர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600005